விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valamburii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 கார்த்திகை 15 புதன்கிழமை (30.11.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 346

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது

சீமெந்து

## சுனாமி மீள் கட்டுமானப் பணிகள் வட - கிழக்கிலும் முன்னெடுக்கப்படும்

### பில்கிளின்டனிடம் மகிந்த உறுதி


(கொழும்பு)

சுனாமிக்குப் பின்னரான கட்டுமானப் பணிகள் தென்பகுதியைப் போன்று வடக்கு கிழக்குப் பகுதிகளிலும் முன்னெடுக்கப்படுமென ஜனாதிபதி மகிந்த உறுதியளித்துள்ளார்.

இதற்காக தனது முயற்சிகளை பல மடங்கு அதிகரித்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் சுனாமி நிவாரணப் பணிகளுக்கான விசேட தூதுவரும் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியுமான பில்கிளிண்டன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போதே ஜனாதிபதி மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார். சுனாமிக்குப் பின்னரான கட்டுமானப் பணிகளை துரிதப்படுத்தும் பொருட்டு மீள் கட்டுமான மற்றும் அபிவிருத்திச் சபை ஒன்றை உருவாக்க தனது தலைமையில் கூடிய முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானித்துள்ளதாக அவர் கூறினார்.

சுனாமி மீள் கட்டுமானப் பணிகள் தொடர்பில் பல விடயங்கள் செயற்படுத்தப்பட்டன. இருந்த போதிலும் இன்னும் பல விடயங்கள் நிறைவேற்ற வேண்டியுள்ளது. இடம் பெயர்ந்த மக்களை அவர்களது நிரந்தரக் குடியிருப்புக்களில் குடியேற்றுவதற்கும் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட (12 ஆம் பக்கம் பார்க்க)



# சமாதான முயற்சிகளை கையாளும் பொறுப்பு அமைச்சர் மங்கள சமரவீரவிடம் ஒப்படைப்பு

## பொதுத்தேர்தல் நடாத்த ஜனாதிபதி ஆலோசனை?

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் பொதுத்தேர்தல் ஒன்றை நடாத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

வரவு செலவுத்திட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

எனினும் அவர் அதற்கு முன்னர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

இதற்கு மேலதிகமான ஆலோசனையினைப் பெறுவதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்காவை இவ் வாரம் சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பின்போது பொதுத்தேர்தல் நடாத்துவது குறித்து ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-4)

## ஆலோசனைக்காக அவர் இந்தியா பயணமாவார்

(கொழும்பு)

**அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையிலான சமாதான முயற்சிகளை கையாளும் பொறுப்பு வெளிவிவகார அமைச் சர் மங்கள் சமரவீரவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.**

**இதனையடுத்து அவர் விரைவில் இந்தியாவிற்கு சென்று தனது சமாதான நடவடிக்கைகள் குறித்து இந்தியத்தலைவர்களுக்கு விளக்கவுள்ளதுடன் ஆலோசனையும் பெறவுள்ளார். அத்துடன் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்து ஆலோசனை நடத்தவுள்ளார்.**

சமாதான முயற்சிகள் குறித்து நன்கு ஆளுமை உள்ள ஒருவரை நியமித்துள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரை மூலமாக ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவுக்கு காலக்கேடு ஒன்றை வழங்கியுள்ளார்.

இதற்கு பதிலளிக்க வேண்டிய பொறுப்பில் ஜனாதிபதியுள்ளார். எனினும் நிதியமைச்சுப்பதவியை தன்னுடன் கொண்டுள்ளதால் எதிர்வரும் 8 ஆம் திகதி வரவு-செலவுத்திட்டத்தினை சமர்ப்பிக்க வேண்டிய பொறுப்பில் ஜனாதிபதியுள்ளார்.

இந்நிலையில் வரவு செலவுத்திட்டப் பொறுப்பபையும் சமாதானப் பொறுப்பையும் ஒரேயடியாக கவனிக்க முடியாத நிலையிலேயே ஜனாதிபதி மகிந்த தன்னுடைய பிரதிநிதியாக சமாதான முயற்சிகளை கையாளும் பொறுப்பை (12 ஆம் பக்க பார்க்க)

## கடல்கொந்தளிப்பால் மீனவர்கள் பாதிப்பு.

(யாழ்ப்பாணம்)

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக யாழ்.குடாநாட்டு மீனவர்கள் எவரும் கடலிற்குச் செல்லவில்லை.

கடல் கொந்தளிப்பு அதிகமாக காணப்பட்டதால் வடமராட்சி ,இன்பருட்டி ,கற்கோவளம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை.

இதேவேளை தீவகத்தில் அனலைதீவு, எழுவைதீவு ,தம்பாட்டி மீனவர்களும் கடற்றொழிலுக்குச் செல்லவில்லை எனக் கூறப்படுகிறது.

மீனவர்கள் நேற்று தொழிலுக்குச் செல்லாததால் யாழ்.குடாநாட்டில் நேற்று மீனுக்கு தட்டுப்பாடு நிலவியது.

இதேவேளை இன்று தாழமுக்கம் குறைவடையலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-4-72)

## வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் வட-கிழக்கில் காற்றுடன் கூடிய மழை

### வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் சிறு சூறாவளியாக மாறியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. யாழ்ப்பாணத்திற்கு கிழக்கே 500 கிலோ மீற்றர் தொலைவில் நேற்றுக் காலை வீசிய இச் சூறாவளி வட கிழக்குத்திசையில் இருந்து மேற்குப்புறமாக நகரக்கூடுமெனவளிமண்டல வியல்திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'பாஸ்' எனப் பெயரிடப்பட்டுள்ள இச் சூறாவளியினால் யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை ஊடாக பொத்துவில் வரையான கரையோரப்பகுதிகள் கொந்தளிப்பாகக்காணப்படும் எனவும் அப்பகுதிகளில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்யுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப் பகுதி மக்களும் கடலுக்குச் செல்லும் மீனவர்களும் அவதானமாகஇருக்குமாறும், காலநிலை மாற்றங்களை அறிந்து செயற் படுமாறும் வளிமண்டல வியல்திணைக்களத்தின் அறிக்கையில் மேலும் தெரிவிக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பிரதிநிதிகள் பதவியில் இருந்து எரிக்சொல்ஹெய்ம்-விதார் இடைநிறுத்தம்

### புதிய பிரதிநிதியை நியமிக்கத்திட்டம்

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளின் விசேட பிரதிநிதிகளாக செயற்பட்டு வந்த எரிக்சொல்ஹெய்ம் மற்றும் நோர்வேயின் முன்னாள் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார்ஹெல்கீசன் ஆகியோர் அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்குப் பதிலாக வேறொரு விசேட பிரதிநிதி நியமிக்கப்படவுள்ளதாக நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எரிக்சொல்ஹெய்ம் மற்றும் விதார் ஹெல்கீசன் ஆகியோர் இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் பங்களிப்பு செய்யமாட்டார்கள் என அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

எரிக்சொல்ஹெய்ம் அந் நாட்டு புதிய அமைச்சராக பதவி ஏற்றுள்ளதாலும் ,விதார் ஹெல்கீசன் அமைச்சுப் பதவியில் இல்லாதினாலும் அவர்கள் இருவரையும் அப்பதவியில் இருந்து விலக்க நோர்வே அரசு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-4)

EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021 - 222 3891, 222 6297, 077-2549999,

011-2372952/3, 011-2360290/1

e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...

# அரசியல் தீர்வா? தன்னாட்சிப் போராட்டமா? முடிவெடுக்கவேண்டிய நிலையில் மகிந்த

## விடுதலைப் புலிகள் ஏட்டின் ஆசிரியர் தலையங்கம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை முன்வைப்பதா? தமிழர்கள் தங்களது தன்னாட்சிப் போராட்டத்தை நடத்துவதா? என்பதில் முடிவெடுக்கவேண்டியது சிறிலங்கா அரச தலைவர் மகிந்த ராஜபக்ஷ தான் என்று கார்த்திகை மாத விடுதலைப் புலிகள் ஏட்டின் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ மாத ஏடான விடுதலைப் புலிகள் ஏட்டின் ஆசிரியர் தலையங்கத்தின் சுருக்கம் வருமாறு;

கடந்த மூன்றரைவருட சமாதான கால அரசியலில் சிங்கள அரசு காட்டிவரும் கடும்போக்கையும், புலிகளின் எல்லைகடந்த நெகிழ்வுப்போக்கையும் தலைவர் பிரபாகரன் தெளிவாக விளக்கியுள்ளார்.

தமிழ் இனத்திற்கு அரசியல்தீர்வு வழங்க மறுக்கும் சிங்களத்தின் கடும்போக்கு - இராணுவவாத அரசியலை சர்வதேச சமூகமும் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை.

சமாதானம் - பேச்சுவார்த்தை என்ற நிலைப்பாட்டை இறுகப் பற்றிப்பிடிக்க சர்வதேச சமூகம் முனைகின்றதே அல்லாமல் யதார்த்தரீதியான சிங்களஅரசு அவற்றை நிராகரித்துவருகிறது என்பதைப் புரிந்துகொள்ள அது தொடர்ச்சியாக மறுத்துவருகிறது.

தமிழரின் அரசியல் கையறு நிலையை புரிந்துகொள்ள சர்வதேச சமூகமும் மறுக்கிறது என்பது கவலையளிக்கும் செயலாக உள்ளது என்று தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரணில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடந்தபோது நடைபெற்ற ரோக்கியோ மாநாட்டை (2003) புலிகள் ஏன் புறக்கணித்தார்கள் என்பதையும் தலைவர் பகிரங்கப் படுத்தியுள்ளார்.

நிதியுதவிகளையும், ஆயுதக் களைவையும் ஒன்றிணைத்து புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க நடந்த ஒரு கூட்டுச்சதியை முறியடிக்கும் நோக்குடனேயே அந்த மாநாட்டை பகிஷ்கரித்தனர் என்று அவர் விளக்கமளித்துள்ளார்.

இப்போது போர்நிறுத்தத்தை ஏற்காத - தமிழரின் தாயகத்தை அங்கீகரிக்காத - ஒற்றையாட்சியே (சிங்களவர் ஆட்சியே) இனப்பிரச்சினைக்குத் தீர்வு எனக்கூறி சிங்கள மக்களின் ஆணைபெற்ற புதிய ஜனாதிபதி பதவிக்கு வந்துள்ளார்.

எல்லோரும் அறிந்த இன்னொரு கடும்போக்காளர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அரசியல் மீண்டும் இரத்தக் களரி யுகத்திற்கு நகர்த்தப்படுகின்றது என்பது அனைவரும் அறிந்த உண்மையாக உள்ளது. புதிய ஜனாதிபதியின் அரசியல் கூட்டாளிகளாக அதிதீவிர சிங்கள இனவெறிக் கட்சிகள் சேர்ந்துள்ளன. புலிகள் இயக்கத்துடன் பேசுவதையே அவர்கள் நிராகரிக்கின்றனர்.

இருந்தபோதும் தலைவர் பிரபாகரன் புதிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஒரு சமாதானத்திற்கான சந்தர்ப்பத்தை மாவீரர்நாள் செய்தியூடாக வழங்கியுள்ளார்.

சமாதானம் என்றுகூறி - காலத்தை இழுத்தடித்து - அதன்மூலம் தமிழரின் தேசிய எழுச்சியை நசுக்க சிங்கள அரசு எடுக்கும் சூழ்ச்சிக்கு புலிகள் இயக்கம் இடம் கொடுக்கமாட்டாது. அதேசமயம் புதிய ஜனாதிபதிக்கும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவதன் மூலம் சர்வதேச சமூகத்திற்கும் தலைவர் அவர்கள் ஒரு செய்தியைக் கூறியுள்ளார்.

சமாதானத்திற்காக புலிகளை வற்புறுத்துவதில் எந்தப் பயனும் இல்லை. புலிகள் சமாதான அரசியலில் போதுமானளவு பங்கெடுத்துவிட்டார்கள். இனியும் சமாதானத்தை நோக்கி ஆக்கபூர்வமான வகையில் நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது சிங்கள அரசுதான். இதை சர்வதேச சமூகமும் புரிந்துகொள்ளவேண்டும்.

தலைவர் விடுத்துள்ள மாவீரர்நாள் செய்தியின் முக்கிய பகுதியாக மேற்குறித்த வாக்கியங்கள் உள்ளன. கடந்த மூன்றரை வருட கால சமாதான அரசியலில் வரப்போகின்ற 2006 ஆம் ஆண்டு ஒரு தீர்க்ககரமான ஆண்டாக இருக்கப்போகிறது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-4)

# இராசிபலன்

30.11.2005
(கார்த்திகை 15, புதன்கிழமை)
சதுர்த்தசி முன்னிரவு 9.51 மணிவரை
விசாகம் முன்னிரவு 11.32 மணிவரை
இராகுகாலம் 12.14 - 01.44 மணிவரை
சுபநேரம் 04.44 - 06.14 மணிவரை

| | |
|---|---|
| **மேடம்:** | சென்ற இடத்தில் செல்வாக்கு, களஸ்திர நன்மை, காரிய அனுகூலம், பொருள்சேர்க்கை. |
| **இடபம்:** | பகைவர் நேசம், புதிய திருப்பம், தொழில் முன்னேற்றம், பொருள் சேர்க்கை. |
| **மிதுனம்:** | மந்தநிலை, பணக்குறைவு, முயற்சி தாமதம், எதிர்பாராத நன்மை. |
| **கடகம்:** | சுபசெலவு, மாதாசுகம், அதிக பிரயாசை, மனச்சஞ்சலம். |
| **சிங்கம்:** | பெருமையடைதல், அந்நியர் சந்திப்பு, எடுத்த காரியம் கைகூடும், விருந்துபசாரம். |
| **கன்னி:** | மனச்சஞ்சலம், காரிய இடையூறு, அதிகாரிகள் ஒத்துழைப்பு, பணவிரயம். |
| **துலாம்:** | புதிய முயற்சி, தெய்வசிந்தனை, போசனசுகம், தேகநலன். |
| **விருச்சிகம்:** | உஷ்ணவியாதி, பிரயாணம், நித்திரைக்குறைவு, உறவினர் வெறுப்பு. |
| **தனுசு:** | எடுத்தகாரியம் கைகூடும், சகோதரர் உதவி, நல்ல வருமானம், தேகநலன். |
| **மகரம்:** | கடினமுயற்சி, பெரியோர்சந்திப்பு, சுபசெய்தி, போசனசுகம். |
| **கும்பம்:** | தந்தைவழி உறவு, மனச் சஞ்சலம், முயற்சி தாமதம், நிலைமாற்றம். |
| **மீனம்:** | வாகனபயம், ஆரோக்கியக்குறைவு, முயற்சி தடங்கல், பணக்குறைவு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது
வளவன்

# எயிட்ஸ்தினப் போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு யு.என்.எச்.சி.ஆர். அனுசரணையுடன் சுகாதாரத் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரை/ஓவியப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் விபரம் வெளியாகியுள்ளது.

அவற்றின் விபரம் வருமாறு;

***கட்டுரைப்போட்டி (பிரிவு 1)***

முதலாம் இடம்: டிலக்ஷனா திருநாவுக்கரசு (தரம் 11 - இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்)

இரண்டாம் இடம்: செ.தேனுஜா (தரம் 11- உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்)

மூன்றாம் இடம்: கு.கணரூபன் (தரம்11 - சுழிபுரம் விக்டோரியா கல்லூரி)

ஆறுதல் பரிசுபெறுவோர்

கு.சொரூபிகா (தரம் 11 - சுழிபுரம் விக்டோரியா கல்லூரி)

கே.வி.இமாஞ்சலி (தரம் 11 - ஸ்கந்தவரோதயா கல்லூரி கந்தரோடை)

பி.பிரசாந் (தரம் 10 - கலாநிதி அ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம் காரைநகர்)

மு.நன்சிர் (தரம் 11 - மானிப்பாய் இந்துக் கல்லூரி)

வ.சண்முகராசா (தரம் 11 - வட்டு. மத்திய கல்லூரி)

சி.பிரதீபன் (தரம் 09 - தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்)

த.தினேஷ் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி கந்தரோடை)

யோகேஸ்வரி கஜேந்தினி (தரம் 10 - மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்)

தே.துவாரகா (தரம் 11 - மத்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்)

***கட்டுரைப்போட்டி (பிரிவு 2)***

முதலாம் இடம்: தே.ரூபேந்திரன் (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்)

இரண்டாம் இடம்: அபிராமி நல்லதம்பி (தரம் 12 - வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி)

மூன்றாம் இடம்: செல்வகுமாரி ஞானசோதி (தரம் 12 - கலாநிதி அ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம் காரைநகர்)

ஆறுதல் பரிசுபெறுவோர்

ரஜிதா யோகநாதன் (தரம் 13 - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)

உதயகௌரி (தரம் 12 - சுழிபுரம் விக்டோரியா கல்லூரி)

வாசுகி செல்வராஜா (தரம் 12 - சுழிபுரம் விக்டோரியா கல்லூரி)

சிவகுமார் சிவரூபன் (தரம் 12 - கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

அமரசேன ஸ்ரெபிகிறாவ் (தரம் 12 - சுண்டுக்குளி பெண்கள் பாடசாலை)

ஆர்.சுதர்சன் (தரம் 13 - சென்.ஜோன்ஸ் கல்லூரி)

ஐ.றபிந்தா (தரம் 12 - சுழிபுரம் விக்டோரியா கல்லூரி)

ச.தர்சினி (மகாஜனாக் கல்லூரி)

ஞானேந்திரன் மரியதர்சினி (தரம் 12 - திருக்குடும்பக் கன்னியர்மடம்)

கு.அனுஷா (தரம் 12 - இணுவில் இந்துக் கல்லூரி)

***சுவரொட்டிப் போட்டியில் பரிசு பெற்றோர் விபரம்:***

முதலாம் இடம்: தர்மகுலசிங்கம் இளையராஜா (கலாநிதி அ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம் காரைநகர்)

இரண்டாம் இடம்: ப.பிரசாந்த் (சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி)

மூன்றாம் இடம்:

கிருபானந்தன் நிசாந்தன் (இணுவில் மத்திய கல்லூரி சுன்னாகம்)

என்.நிசாந்தன் (கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

சுவரொட்டிப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு பரிசில்களும் ஏனையவற்றில் பங்குபற்றிய அனைவருக்கும் நாளை மாலை இரண்டு மணியளவில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் எயிட்ஸ் தின நிகழ்வில் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (ற)

## 'அறுவடை' நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தமிழ் செய்தி தகவல் மையத்தின் 'அறுவடை' நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 3 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-7)

## பிரியாவிடை

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் சாலைக் காப்பாளராகவும், சாலை முகாமையாளராகவும் பதவி வகித்து இளைப்பாறிய தம்பிப்பிள்ளை இராமச்சந்திரனின் பிரியாவிடை அண்மையில் காரைநகர் சாலையில் நடைபெற்றது. (த-9)

## தமிழ் கத்தோலிக்க மக்களின் நன்மைகருதி

# யாழ்ப்பாணம் - திருமலை - மட்டுநகர் - மன்னார் மறைமாவட்டங்கள் தனிஅலகாக இயங்க வேண்டும்

யாழ் மறைமாவட்டம் இலங்கையின் ஒரு பழம் பெரும் மறைமாவட்டம். யாழ்ப்பாணம் முதல் கொழும்புவரையிலான பிரதேசப பகுதிகளை தன் மறைமாவட்ட அலகினுள் வைத்து இயக்கிய மறைமாவட்டம். காலத்தின் தேவை கருதியும் செயல்பாடுகளின் வசதி கருதியும் இம் மறைமாவட்டம் காலத்துக்குக்காலம் பல மறைமாவட்டங்களை தன்னிடம் இருந்து பிரித்து புதிய மறைமாவட்டங்களை உருவாககிக் கொண்டே வந்திருக்கின்றது. மிக நீண்டகாலமாக தமிழ் மக்களின் நன்மை கருதி பெரும்பான்மையாக தமிழ் பேசும் மறைமாவட்டங்களை ஓர் அலகாக இணைத்து இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவயின் கீழ் இன்னுமொரு அலகை உருவாக்க வேண்டும் என்ற தேவை உணரபபட்டே வந்திருக்கிறது. ஆனால இது இன்னும் நடைமுறைப்படுத்தப்படாது இருப்பது துரதிஸரவசமான ஒன்றாகும்.

1979ஆம் ஆண்டு ஏறக்குறை 25 ஆண்டுகளுக்கு முன்னர் அப்போதைய யாழ் ஆயராகிய மறைந்த மேதகு வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை தூரநோக்குடனும், செயல்பாட்டுத் திறனுடனும் சமர்ப்பித்த இந்த வேண்டுகோளுக்கு கொடுக்கப்பட்ட அதே பதிலே இப்போதும் வழங்கப்பட்டிருப்பது தமிழ் தலத் திருச்சபைகளின் வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் கருதிய நிலையில் கூறப்பட்ட பதில் அல்ல என்றே எண்ணத தோன்றுகின்றது. இது பொருத்தமான காலம் அல்ல என்று 25 ஆண்டுகளுக்கு முன்னர் தெரிவிக்கப்பட்ட அதே பதில் இப்போதும் வேறுவார்த்தைகளில் சொல்லப்பட்டிருப்பதாகவே கருதவேண்டியிருக்கிறது. யாழ் திருமலை மட்டுநகர் மன்னார் மறைமாவட்ட ஆயர்கள் கூட்டாகத் தெரிவித்த இந்த வேண்டுகோளை இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையும் வத்திக்கான் செயல் பீடமும் ஒருவகையில் நிராகரித்து இருக்கின்றன என்றே எண்ண வேண்டியுள்ளது.

யாழ், திருமலை - மட்டுநகர், மன்னார் மறைமாவட்டங்கள் தமக்குள் இணைந்து ஒரு தனி அலகாக இயங்குவது பற்றி ஆலோசனை செய்து வருகின்றன. திருத தந்தை 16ஆம் பெனடிக்ற் பாப பரசரை சந்திப்பதற்காக வத்திககான் நகர் சென்றிருந்த போது யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இவ்வேண்டுகோளை திருத்தந்தையிடம் சமர்ப்பித்தார். இவ்வேண்டுகோள் பின்னர் பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதியிடமும், இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையிடமும் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் பின்னரே இம்மூன்று மறைமாவட்டமும் தனி அலகாக அங்கீகரிக்ப்படும் வரை இணைந்து இயங்கலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளனர். 1979ஆம் ஆண்டு ஏறக்குறைய 25 ஆண்டுகளுக்கு முன்னர் மறைந்த முன்னாள் ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை காலத்தில் இவ் வேண்டுகோள் முதன் முதல் சமர்ப்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஏறக்குறைய 85 குருக்கள், துறவியர், பொது நிலையினர் அடங்கிய குழு மேய்ப்புப்பணி கலந்தாய்விற்காக ஒன்று சேர்ந்தபோது யாழ், திருமலை-மட்டுநகர் மறைமாவட்டங்கள் இணைந்த ஒரு புதிய அலகை இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையினுள் உருவாக்க தீர்மானிக்கப்பட்டது. பின்னர் இத்தீர்மானமானது யாழ் மறைமாவட்ட குருக்களின் செனற்சபையில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதே வேளை மன்னார் மறைமாவட்டம் யாழ் மறைமாவட்டத்திலிருந்து தனி மறைமாவட்டமாக பிரிக்கப்படவேண்டும் என்ற சிபாரிசும் செய்யப்பட்டது. மன்னார் மறைமாவட்டம் தனியாகப் பரிந்த பின்னர் யாழ், திருமலை -மட்டு நகர் மறைமாவட்ட இணைப்புடன் சேர்ந்து செயற்படலாம் எனறும் தெரிவிக்கப்பட்டது.

**யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை புதிய பாப்பரசரை சந்திப்பதற்காக இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையோடு வத்திக்கான் நகருக்கு சென்றபோது திருத்தந்தையிடம் ஒரு வேண்டுகோளை விடுத்தார். இந்த வேண்டுகோள் வட பகுதி வாழ் தமிழ் கத்தோலிக்க மக்களின் நீண்டகாலத் தேவையை நிறைவு செய்வதற்கான ஒரு வேண்டுகோளாகவே இருக்கிறது. யாழ், திருமலை - மட்டு நகர், மன்னார் மறைமாவட்டங்களை இணைத்து அதனை ஒரு தனி அலகாக்கி செயற்பட அனுமதிக்க வேண்டுமென்பதே யாழ். ஆயர் விடுதத அந்த வேண்டுகோளாகும். இக்கட்டுரையில் இவ்வேண்டுகோளின் பின்னணியும் அது பற்றிய விளக்கங்களும் தரப்படுகின்றன.**

மன்னார் மறைமாவட்டத்தை பிரிப்பதற்கான தீர்மானம் அன்றைய யாழ்.ஆயர் மேதகு தியோகுபபிள்ளை ஆண்டகையின் ஒப்புதலுடன் இலங்கைக் கத்தோலிக்க ஆயர்பேரவைக்கு 22-06-1979 இல் அனுப்பிவைக்கப்பட்டது. இலங்கைக்கத்தோலிக்க ஆயர் பேரவை மன்னாரை புதிய மறைமாவடடமாக பிரிப்பதற்கு முழுவிருப்பம் தெரிவித்து அதனை வத்திக்கானுக்கு சிபாரிசும் செயதது. இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் கீழ் தனி மாவட்டங்கள் இணைந்த ஒரு தனி அலகை அமைப்பதற்கும் ஆயர் பேரவையில் கலந்து ஆராயப்பட்டது. அப்போது மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை மன்னார் மறைமாவட்டமும் பிரிக்கப்பட்டு மூன்று தமிழ் பேசும் மறைமாவட்டங்கள் இணைந்து செயறபடுவது ஆன்மீக, கலாசார, வேதபோதக பணிகளுக்கு பெரும் துணையாக இருக்கும் என சுட்டிககாட்டி இந்த புதிய அலகு பயனானது மட்டுமல்ல மிக அவசரமானதும்கூட என்று வாதிட்டார். இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை இவ் விடயத்தில் 2பிரிவாக பிரிந்து கொண்டது. சிங்களப் பிரதேச ஆயர்கள் இதற்கு தமது ஒத்துழைப்பையும் தர விருப்பம் தெரிவிக்கவில்லை. வேறு ஒரு நல்ல நேரத்தில் ஒரு சாதகமான பதில் இதற்கு வழங்கப்படலாம் என்றே பெரும்பான்மையன ஆயர்கள் தெரிவித்தார்கள். அதேவேளை தமிழ் பேசும மறைமாவட்ட மக்களுக்கு துணைபுாிவதற்கு ஏற்ற ஒரு நல்ல அமைப்பு உருவாக்கப்பட வேணடியதன் தேவையை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இதற்கு வழிவகுக்கும் முகமாக தமிழ்ப் பகுதிகளிலும் தனியான மறைக்கல்வி, திருவழிபாட்டு, கலாச்சார, சமூகத்தொடர்பு ஆணைக்குழுக்கள நிறுவப்படவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

மேற்படி விடயங்களை தமது அறிக்கையில் சுட்டிக்காட்டிய யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பின்வரும் காரணங்களுக்காக தமிழ் மறைமாவட்டங்கள் இணைந்து செயற பட வேண்டும் என்பதையும் தெரிவித்திருந்தார். 1979ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முன்னாள் யாழ். ஆயரால் மறைபரப்பு செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையானது கொழும்பு ஆங்கிலகத்தோலிக்க வார ஏடான மெசஞ்சர் பத்திரிகையில் முன்னு ரிமை கொடுத்து பிரசுரிக்கப்பட்டது. 1993ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மேய்ப்புப்பணி மாநாட்டிலும் இக் கருத்து மீண்டும் முன்வைக்கப் பட்டு வலியுறுத்தப்பட்டது.

1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற பாரிய இடம்பெயர்வின் பின்னர் இவ் வெண்ணத்திற்கு உரிய செயல் வடிவம் கொடுக்கக் கூடிய சூழ் நிலை உருவாகவில்லை. 20 ஆண்டு கால கொடிய போரின பின்னர் நிகழ்ந்த சுனாமிப் பேரழிவால் கத்தோலிக்க கரையோரப் பிரதேசங்கள் பல பாரிய அழிவுகளுக்ளாகியுள்ளன. இந்நிலையில் மேய்ப்புபணி திட்டமிடலுககாகவும், ஒங்கிணைப் பிற்காகவும், இணை செயற்பாட்டிற்காகவும், பல்வேறுபட்ட அப்போஸ்தலிக்க செயற்பாடுகளின் பகிர்விற்காகவும், முன்னேற்றத்திற்காகவும் இத்திட்டம் நடைமுறைபபடுத்தப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்றரை வருடகாலமாக யுத்தம் அற்ற சூழ்நிலை போக்கு வரத்திற்கும், பல முன்னேற்ற செயற்பாட்டிற்கும் வழி வகுத்துள்ள நிலையில் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். எனவே இம் மூன்று மறைமாவட்டங்கள் இணைந்த ஒரு தனி அலகினை உருவாக்க அனுமதிக்க வேண்டும் என யாழ் ஆயர் வேண்டுகோள விடுத்தார்.

யாழ். ஆயரின் மேற்படி விணணப்பத்தில் திருமலை மட்டுநகர், மன்னார் மறைமாவட்ட ஆயர்களும் ஒப்புதலிட்டு வலியுறுத்தியிருந்தனர். இதன் பின்னர் நடைபெற்ற இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையில் இவ்விடையம் கலந்தாலோசிக்கப்பட்டது.

அதன் பயனாக உடனடியாக இப்புதிய கட்டமைப்பை அங்கீகரிக்கா விடினும் 3 மறைமா்வட்டங்களும் இணைந்து செயல்படுவதென ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. காலப்போக்கில் இது ஒரு தனி அலகாக அமைககப்படும் சாத்தியங்கள் உண்டு.

தமிழ் கத்தோலிக்க மக்களின் நன்மை கருதி இந்த மறைமாவட்டங்கள் இயங்க அனுமதிககப்பட வேண்டுமென இறை வரம் வேண்டுவோம்.

**அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை**

# சந்திரிகாவின் கையொப்பமிட்ட காசோலைகளுக்கான கொடுப்பனவுகளை நிறுத்துமாறு மஹிந்த உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தாம் பதவி வகித்த காலத்தில் ஜனாதிபதி நிதியிலிருந்து 750 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட நிதியைப் பெறுவதற்கான காசோலைகளில் கைச்சாத்திட்டுளளதாகவும் அதனையடுத்து புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இக்காசோலைகளுக்கான நிதி கொடுப்பனவை உடனடியாக நிறுத்துமாறு உத்திரவிட்டுள்ளதாகவும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சந்திரிகா குாமரதுங்க தாம் பதவியிலிருந்து விலகுவதற்கு முன்னர் ஜனாதிபதி நிதியிலிருந்து பெருந்தொகையான பணம் அறவிடப்படுவதற்கான காசோலைகளில் கைச்சாத்திட்டுள்ளார் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. இதனையடுத்து நிதிக் கொடுப்பனவை தடுத்து நிறுத்துமாறு சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. சந்திரிகா குமாரதுங்காவால் கைச்சாத்திடப்பட்ட காசோலைகளில் ஒன்று அரசு சார்பற்ற நிறுவனமொன்றுக்கு வழுங்கப்பட்டுள்ளது இது பெருந் தொகைக்குரியது.

மற்றுமொரு காசோலை திட்டமொனறுக்காக வட மத்திய மாகண அரசியல் வாதி ஒருவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பிரியாவிடை வைபவமொன்றில் கலந்துகொள்வதற்காக அநுராதபுரத்துககுச் சென்றிருந்தார். அச் சமயம இக் காசோலை வழுங்கப்கப்பட்டுள்ளது என்றும் இவ்வட்டராங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி நிதியிலிருந்து இவ்வாறு அவசர நிதி கொடுபபனவுகளுக்கான காரணம் என்ன என்பது குறித்து விசாரணை யொனறை மேற்கொள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார். (ந-4)

# மண்டூர் முன்னரங்க இராணுவ காவலரண் 500 மீற்றர் முன்நோக்கி நகர்த்தப்பட்டுள்ளது

## -அரியநேந்திரன் எம்.பி.

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இராணுவத்தின மண்டூர் முகாமில் முன்னரங்க காவலரண் 500 மீற்றருக்கு முன் நோக்கி நகர்த்தப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ப.அரியனேந்திரன் குற்றச்சாட்டியுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளின் போது இந்த நடவடிக்கை மேற்கொளளப்பட்ட அதேநேரம் அது தொடர்ந்தும் நீடிக்கப்பட்டிருக்கின்றது.

போர்நிறுத்த உடன்பாட்டின் கீழ் இது பாரிய மீறல் சம்பவமாகும் இது தொடர்பாக போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுளளது.

ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவின் முதலாவது யுத்த நகர்வாக இதனைக் கருதவேண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-9)

## இராணுவ விட்டோடிகள்

# சட்ட பூர்வமாக விலக மீண்டுமோர் சந்தர்ப்பம்

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற இராணுவத்தினர் சட்டப்படி விலகும் சந்தர்ப்பம் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் சகல படைப்பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் தப்பிச்சென்ற இராணுவத்தினர் அனைவரும் இதன்மூலம் சட்டரீதியாக இராணுவத்திலிருந்து விலக முடியும் என்று இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

2003ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி இராணுவத்திலிருந்து தப்பிச்சென்றவர்கள் என்று அறிவிக்கப்பட்டவர்கள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி முதல் 23ஆம் திகதிவரை வேலை நாட்களில் கனாக்கொட இராணுவப் படைமுகாமில் உள்ள அலுவலகததினூடாக சட்டரீதியாக விலக முடியும்.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவாகளின் பெயர்கள் நவம்பர் மாதம் 21ஆம் திகதி முதல இன்று வரை மாவட்ட செயலகங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாகத தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

# யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்த தேசிய ரீதியிலான கொள்கை

(கொழும்பு)

யுத்தம் காரணமாக தமது சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்காக தேசிய ரீதியிலான கொள்கை ஒன்றுவகுக்கபபடவுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சர் றிஷாட் பதியூதீன் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெற்றுவரும் யுத்த அனர்த்தம் காரணமாக இலட்சக்கணக்கான மக்கள் தமது சொந்த இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும், உறவினா இல்லங்களிலும் தஞ்சமடைந்து வாழ்ந்துவருகின்றனர்.

இவர்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட போதும் முறையான சட்டமொன்று பின்பற்றப்படாமையால் பல்வேறு சிக்கல்கள் எதிர்நோக்கப்பட்டுளளது.

இந்த நிலைமையைக் கருத்தில்கொண்டு எதிர்கால நடவடிக்கைகளைத் திட்டமிடும் வகையில் மீள்குடியேற்றம் தொடர்பாக தேசிய ரீதியிலான கொள்கை ஒன்றைத் தயாரித்து அத்திட்டத்தின பிரகாரம் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படும்.

தததமது சொந்த இருப்பிடங்கள்ளுக்குச் சென்று மீளக்குடியேறக்கூடிய சூழலில் உள்ள மக்களை வேறாகவும் சொந்த இடங்களுக்குச் செல்லமுடியாதுள்ள மக்களை வேறு இடங்களில் நிரநதரமாக குடியமர்த்துவதற்காகவும், கொள்கைத் திட்டங்கள் வகுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

# இன்று ஒரு தகவல்

## அறிவா? செல்வமா?

இந்த உலகத்தில் நாம் நல்ல விதமாக இருக்க வேண்டும் என்றால் அதற்கு முக்கியமாகத் தேவைப்படுவது இரண்டு. ஒன்று அறிவு. இன்னொன்று செல்வம். சரி...''இந்த இரண்டில் சிறந்தது எது?''என்று ஒருகேள்வி கேட்டால் என்ன பதில் சொல்வது? இதே கேள்வியை ஹஸ்ரத் அலி அவர்களிடம் கேட்டார்களாம். அவர் ஒரு பெரிய அறிஞர். கேள்வி கேட்டவர்களும் சாதாரண ஆட்கள் இல்லை... இவர்களும் அறிஞர்கள் தான்.

ஒருநாள் ஹஸ்ரத் அலி அவர்களிடம் பத்து அறிஞர்கள் வந்தார்களாம்.''ஐயா...நாங்கள் பத்துப் பேரும் உங்களிடம் ஒரே கேள்வியைத்தான் கேட்க வந்திருக்கிறோம். ஆனால் எங்கள் பத்து பேருக்கும் நீங்கள் தனித்தனியாக பதில் சொல்ல முடியுமா?''என்று கேட்டிருக்கிறார்கள். அதாவது ஒரே கேள்விக்கு இவரிடமிருந்து பத்து விதமான பதிலை எதிர்பார்க்கிறார்கள்.''சரி...கேளுங்கள் என்ன கேள்வி?''என்றார் இவர்.

அப்போதுதான் அவர்கள் கேட்டார் ''செல்வம் அறிவு இவை இரண்டில் சிறந்தது எது?''என்று. ஹஸ்ரத் அலி என்ன செய்தார் தெரியுமா?அவர்களை ஒவ்வொருவராகக் கூப்பிட்டார். ஒவ்வொருவிதமான பதில்களைச் சொல்லி அனுப்பினார். முதலில் ஒருவரைக் கூப்பிட்டுச் சொன்னார். ''அறிவு என்பது தீர்க்கதரிசிகள், ஞானிகள், மகான்களின் பரம்பரைச் சொத்து. ஆனால் செல்வமோ அறிவோ கொடுங்கோலரின் ஆதிக்கம். அறிவுதான் சிறந்தது'' என்றார்.

இரண்டாவது ஆளைக் கூப்பிட்டார். ''உங்களிடம் செல்வம் இருந்தால் நீங்கள் தான் அதைக் காப்பாற்ற வேண்டும். ஆனால் அறிவு உங்களை எப்போதும் காப்பாற்றும். ஆகவே அறிவுதான் சிறந்தது'' என்றார். மூன்றாவது ஆளை கூப்பிட்டார். ''செல்வனுக்கு எப்போதும் விரோதிகள் அதிகம். ஆனால் அறிஞனுக்கு நண்பர்கள் அதிகம். அதனால் அறிவு தான் சிறந்தது'' என்றார்.

அடுத்தவரைக் கூப்பிட்டார். 'செல்வம் அடுத்தவர்களுக்குக் கொடுக்கக்கொடுக்கக் குறையும்! ஆனால் கல்வியோ அதிகரித்துக்கொண்டே வரும். அறிவுதான் சிறந்தது'' என்றார். இன்னொருவரைக் கூப்பிட்டார். ''அறிவுள்ளவன் எப்போதும் அதை அடுத்தவர்களுக்கு வாரி வழங்கிக்கொண்டே இருப்பான்.அதனால் அவனிடம் தாராளத் தன்மை இருக்கும். அதனால் அறிவுதான் சிறந்தது என்றார். 'ஆறாவது நபரைக் கூப்பிட்டார். ''செல்வத்தைக் கள்வர்கள் திருடிக்கொண்டு போகமுடியும். ஆனால் அறிவை கவரமுடியாது'' என்றார். ஏழாவது நபரைக் கூப்பிட்டார்''செல்வம் கால ஓட்டத்தில் அழிந்துவிடும். ஆனால் அறிவை கால ஓட்டம் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே அறிவு தான் சிறந்தது என்றார்.

எட்டாவது ஆளைக் கூப்பிட்டார் ''செல்வத்திற்கு எப்போதும் எல்லை உண்டு. நிறை உண்டு. அளவு உண்டு. கணக்கு உண்டு. ஆனால் அறிவுக்கோ அப்படிப்பட்ட எல்லை எதுவும் கிடையாது. அதனால் அதுதான் சிறந்தது'' என்றார். அடுத்தவரைக் கூப்பிட்டார் ''செல்வம் உள்ளீத்தில் உள்ள ஒளியைப் போக்கிவிடும். இருளை உண்டாக்கி விடும்.விரிந்த மனப்பான்மையை குறுகலாக்கி விடும். ஆனால் அறிவு அப்படி இல்லை. இருண்ட உள்ளத்தில் ஒளியைப்பாச்சி அதை விசாலப்படுத்தும். அதுதான் சிறந்தது என்றார்.

கடைசியாக பத்தாவது நபரைக் கூப்பிட்டார் ''செல்வம் மனதில் செருக்கை உண்டாக்குகிறது. ஆணவத்தை ஏற்படுத்துக்கிறது. அதனால் நானே கடவுள்'' என்று நினைக்கும் அளவுக்கு மனிதனைத் தாழ்த்தி விடுகிறது. ஆனால் அறிவு பணிவையும் பண்பாட்டையும் வளர்க்கிறது. அதனால் அறிவு தான் சிறந்தது'' என்றார்.ஆகா இப்படி பத்துப் பேருக்கும் பத்துவிதமாக பதில் கூறியதன் மூலமாக ஹஸரத் அலி அவர்கள் செல்வத்தைவிட அறிவுதான் சிறந்து என்பதற்கு பத்துக் காரணங்களைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அந்த அறிஞர் பத்துப்பேர் கேட்ட ஒரே கேள்விக்கு பத்துப்பதிலைச் சொன்னார். எனக்கு வேண்டிய ஒருவர் பத்துப்பேர் கேட்ட கேள்விக்கு ஒரே பதிலை சொல்லிச் சமாளித்துவிட்டார் சார் கேள்வி என்ன தெரியுமா? ''என்னிடம் வாங்கிய கடனை எப்போது திருப்பிக்கொடுக்கப் போகிறாய்'' இது தான் அந்த பத்துப்பேரும் கேட்ட ஒரே கேள்வி. ''இந்த மாதம் 26ஆம் திகதி தந்து விடுகிறேன்'' என்ற ஒரே பதிலைச் சொல்லி அத்தனை பேரையும் அனுப்பி வைத்துவிட்டார் இவர்.

எல்லோரும் போன பின்பு இவரை தனியாகக் கூப்பிட்டு அது என்ன சார் கணக்கு. 26ஆம் திகதி அன்று என்ன அதிசயம் நடக்கப்போகிறது? என்று கேட்டேன் ''அதிசயம் அன்றைக்கு அல்ல சார். அதற்கு முதல் நாளே நடக்கப் போகிறது'' என்றார். ''விபரமாகக் கூறுங்கள்'' என்றேன்.

வேறு ஒன்றும் இல்லை... 26ஆம் திகதிதானே எல்லோரையும் வரச்சொல்லியிருக்கிறேன் அதற்கு முதல்நாளே நான் தலைமறைவாகி விடப்போகிறேனே'' என்றார் மிகப் பெருமையாக.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு பிரபாவின் மாவீரர் தின உரைமூலம் அரசுக்கு இறுதி வாய்ப்பு -சந்திரசேகரன்

(கொழும்பு)


''தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரை மூலம் அரசுக்கு சமாதானத்தை ஏற்படுத்த இறுதி வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரை இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் தொடர்புடைய அனைவரையும் தீர்க்கமாக சிந்திக்க வைக்கிறது.

இலங்கையின் சகல அரசாங்கங்களும் தங்களை எவ்விதத்திலும் நியாயப்படுத்திக் கொள்ள முடியாத அளவு வரலாற்றுப் பக்கங்கள் உலகத்துக்கு திறந்து காட்டப்பட்டுள்ளது.

இவ் விவகாரத்தில் அக்கறை காட்டிய உலக சக்திகள் இந்த கொதி நிலையை அசட்டை செய்தால் மனிதாபிமானத்திலும் அடிப்படை மனித உரிமையிலும் அக்கறை காட்டாத ஒரு இனத்துக்கு எதிரான சதித்தனமான வஞ்சக நடவடிக்கைகளுக்கு இவர்களும்துணை போனதாகவே ஆகிவிடும்.



இத்தகைய போக்கை உலகம் தொடருமானால் ஒரு இனமே துடிதுடித்து மடிவதை வேடிக்கை பார்க்கின்ற கொடூரமான நிகழ்வாகவே அது அமையும். பிரபாகரனின் உரையின் மூலம் அரசுக்கு இறுதி வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அரசியல் அழுத்தங்களினால் இதனை உதாசீனப்படுததுவதும் மக்களின் நலனுக்காக இந்த சவாலை ஏற்றுக்கொண்டு சரியான பக்கம் சிந்திப்பதும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கையிலேயே தங்கியுள்ளது.

ஆட்சியாளர்களின் அசட்டையினால் இன்னொரு யுத்தம் ஏற்படுமாயின் இதற்கு முன்பு என்றுமில்லாதவாறு முழு நாடுமே நிலைகுலைந்துவிடும் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். அரசும் இவ்விகாரத்தில் அக்கறை காட்டும் உலக நாடுகளும் உடனடியாக முடிவெடுத்து முழு வீச்சுடன் செயற்பட்டு நாட்டையும் மக்களையும் மிகப் பயங்கரமான ஆபத்திலிருந்து பாதுகாக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-4)

## ஐ.தே.க எதிர்கொண்ட பிரச்சினைகளை பிரபாவின் உரைவெளிப்படுத்தியுள்ளது -திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி கடந்த கால சமாதான நடவடிக்கைகளின் போது எந்தளவு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தது என்பதை விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் மாவீரர்தின உரையில் வெளிப்பட்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவரின் மாவீரர் தின உரை தொடர்பாகக் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத்தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளை சிறைப்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சி சமாதானப் பேச்சுவார்த்தைகளை கச்சிதமாக முன்னெடுத்தது என பிரபாகரன் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் ஐக்கிய தேசியக்கட்சி நாட்டைபிரிவுபடுத்தவோ பிளவுபடுத்தவோ முயலவில்லை என்ற விடயம் வெட்டவெளிச்சமாக தெரியவந்துள்ளது.

இது எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது எனவும் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.(4)

## ஐ.தே.கட்சியின் செயற்குழு உறுப்பினர் சபை கூடியது

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் முதல் தடவையாக ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினர்களின் சபை கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் கூடியது. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

ஜனாதிபதித் தேர்தலில ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி கூறும் யோசனை ஒன்றும் இங்கு நிறைவேற்றப்பட்டது.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் தேர்தலுக்கு ஏற்பட்ட பாதிப்புக்குறித்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கட்சியின் மீளமைப்பு நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்ட அதேவேளை, எதிர்வரும் ஜனவரி மாதத்தில் கட்சியின் மாநாட்டை நடாத்துவது குறித்தும் இங்கு ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது. தேர்தல் தொடர்பான வன்முறைகள் குறித்து ஆராயவும் குழுஒன்று இதில் தெரிவு செய்யப்பட்டது. (ற-4)

## உலக எயிட்ஸ் தினம்

(கொழும்பு)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் உலக எயிட்ஸ் தினத்தை நாளை மிக விரிவாகவும் ஓர் விழிப்பு நிகழ்வாகவும் கொண்டாடவுள்ளது.

இந்நிகழ்வை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே ஓவியப் போட்டியொன்றை இன்று சென்சாள்ஸ் மாகாவித்தியாலத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு நடாத்தவுள்ளது.

சிறந்த ஓவியம் வரைந்த மாணவர்களில் முதல் மூவருக்கு பணப்பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படும்· பரிசில்வழங்கும் வைபவம் இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கத்தின் யாழ் கிளையில நாளை நடைபெறவுள்ள எயிட்ஸ் தின விழாவில் வழங்கப்படும்.

இத் தினத்தை முன்னிட்டு நாளை பிற்பகல் 2.00மணிக்கு நடைபவனியொன்று யாழ். சென் பற்றிஸ் கல்லூரியிலிருந்து ஆரம்பமாகி யாழ்.கிளையை வந்தடையும்.

இந்நிகழ்வில் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை அங்கத்தவர்கள் பிரிவுத்தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

உலக சுகாதார நிறுவன ஆலோசகர் வைத்திய கலாநிதி என்.சிவராஜா வைத்திய கலாநிதி எஸ்.எஸ் அருளானந்தம் ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.கிளையின் சிறந்த பெண் தொண்டர்களுக்கான பரிசு ஜீ.ஆசிர்வாதத்திற்கு வழங்கிக் கௌரவிக்கப்படும். (த-7)

## சாள்ஸ் ஞானக்கோனை ஆஜர் செய்ய நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலைச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள வர்த்தகரான சாள்ஸ் ஞானக்கோனை விடுதலை செய்ய அல்லது ஆஜர் செய்யுமாறு கோரும் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவின் பணிப்பாளர் உட்பட பலர் அந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள ஞானக்கோன் நியாயமான காரணமின்றி அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-7)

## 2005 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் கணக்கெடுப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

(கொழும்பு)

2005ஆம் ஆண்டிற்கான வாக்காளர்களைக் கணக்கெடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

குடும்பத்தலைவர்கள் பூர்த்தி செய்து சமர்ப்பித்த மாதிரிப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்கள் வாக்காளர் பதிவேட்டில் சேர்க்கப்பட வேண்டுமா? நிராகரிக்கப்பட வேண்டுமா? என்பது பற்றி சிபார்சு செய்யப்படும்.

இதுதொடர்பான விடயங்களை ஜனவரி 3ஆம் திகதி தொடக்கம் 4 வார காலப்பகுதியில் வாக்காளர்கள் அறிந்து கொள்ள முடியும்.

இந்த விபரங்கள் மாவட்ட செயலகங்கள், தேர்தல் செயலகங்கள்,பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர் காரியாலயங்கள், அஞ்சல் நிலையங்கள் ஆகியவற்றில் பார்வைக்கு வைக்கப்படும்.

அவற்றின் மூலம் தமது பெயர் வாக்காளர் பதிவேட்டிற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளதா என்பதை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும் என தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

தமது பெயர்களைப் பதிவு செய்யக்கூடிய தகுதியிருந்தும் சிபார்சு செய்யப்படாமல் இருப்பது மற்றும் தவறான முறையில் பதிவு செய்யப்படும் விதத்திலும் சிபார்சு செய்யப்பட்டு இருப்பது போன்ற விடயங்கள குறித்து வாக்காளர்கள் ஆட்சேபனைகளைத் தெரிவிக்கலாம்.


இது தொடர்பான விண்ணப்பப்படிவங்களை சம்பந்தப்பட்ட காரியாலயங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.2005ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பதிவேட்டில் தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்வதற்கு பொதுமக்களுக்கு வழங்கப்படும் கடைசி சந்தர்ப்பம் இதுவாகும் என தேர்தல் செயலகம் கூறியுள்ளது. (த-7)

# 'முறியடிக்கப்படுமோ'

மேற்கிந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் பிறைன் லாரா டெஸ்ட் போட்டிகளின் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர் என்ற மாபெரும் சாதனையைப் படைத்துள்ளார்.

இச்சாதனை இதுவரை அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித்தலைவர் அலன் போர்டரிடம் இருந்தது. இந்தியாவின் சுனில் கவாஸ்கர் டெஸ்ட் போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல் கல்லை முதல் முதலாக எட்டினார்.

கவாஸ்கரின் சாதனையை முறியடித்த அலன் போர்டர் 265 டெஸ்ட் இனிங்ஸ்களில் (156 போட்டி) விளையாடி 11,174 ஓட்டங்களைக் குவித்திருந்தார்.



'மைல் கல்லை எட்டிப் பிடித்தேன்'

அவுஸ்திரேலியாவுக்கும், மேற்கிந்திய அணிக்கும் இடையேயான மூன்றாவது டெஸ்டில் முதல் இனிங்ஸில் களமிறங்கிய லாரா அவுஸ்திரேலிய வீரர்களின் பந்துவீச்சை லாவகமாக எதிர்கொண்டு ஆடி இரட்டைச் சதம் அடித்தார்.

பிறகு அவர் அலன் போர்டரின் ஓட்ட எண்ணிக்கையை தாண்டிச் சென்று லாராவின் புதிய சாதனையைப் புரிந்தார். லாராவின் புதிய சாதனையை அவுஸ்திரேலிய வீரர்கள் ஆரவாரம் செய்து அங்கீகரித்தனர்.

புதிய சாதனை புரிந்துகொண்ட லாரா, தனது கருத்துக்களைப் பரிமாறுகையில், தற்போது மேற்கிந்திய அணி இருக்கும் நிலை குறித்து வருந்தினார். தனது சாதனை விரைவில் முறியடிக்கப்பட்டு விடுமானாலும் இன்றைய நிலையில் புதிய சாதனை படைத்தது குறித்து தான் மகிழ்ச்சியாக இருப்பதாகத் தெரிவித்தார்.

றிக்கி பொண்டிங், சச்சின் டெண்டுல்கர் போன்றவர்கள் என்னைவிட வயதில் 4,5 வயது குறைந்தவர்கள். இவர்கள் என்னுடைய சாதனையை முறியடித்துச் செல்ல விரும்புவார்கள்.

இச்சாதனையை ஒரு நாளில் முறியடிக்கவும் செய்வார்கள். இருந்தாலும் இன்றைய நிலையில் டெஸ்ட் போட்டிகளின் வரலாற்றிலேயே அதிக ஓட்டங்கள் எடுத்த நிலையில் இருப்பது மகத்தான ஒன்று தான் என நான் நினைக்கின்றேன்.

இதனால் மற்றவர்களைக் காட்டிலும் என்னை நீங்கள் சற்று உயர்வாகவே மதிப்பிட்டுக் கொள்ளலாம் என லாரா தனது சதனை குறித்து பரிமாறிக் கொண்டார்.

இச் சாதனையைவிட டெஸ்ட் போட்டிகளில் ஒரு இனிங்ஸில் 400* ஓட்டங்கள் மற்றும் முதல்தர கிரிக்கெற் போட்டியில் 501* ஓட்டங்கள் என்ற சாதனையையும் லாரா படைத்துள்ளார்.

அத்துடன் டெஸ்ட் போட்டியொன்றின் ஒரு ஓவரில் 28 (466444) ஓட்டங்களையும் குவித்து சாதனை படைத்துள்ளார்.

லாரா சாதனை என்று சொல்லும் அளவுக்கு கிரிக்கெற் போட்டிகளில் எத்தனையோ சதனைகளுக்கு சொந்தக்காரராக விளங்குகின்றார்.

மேற்கிந்தியத்தீவுகளின் ரிறினிடாப் மாநிலத்தில் 1969 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி பிறந்த லாராவின் முழுப் பெயர் பிறைன் சார்ள்ஸ் லாரா என்பதாகும்.

டெஸ்ட் போட்டிகளில் 21 வயதில் பாகிஸ்தான் அணிக்கெதிராக லாகூர் மைதானத்தில் 1990 ஆம் ஆண்டு களம் புகுந்தார்.

இடது கை துடுப்பாட்ட வீரரான லாரா இதுவரை 121 டெஸ்ட் போட்டிகளில் பங்கு கொண்டு 213 இனிங்ஸில் விளையாடி 11, 204 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

நோயல்

# லாராவின் சாதனை





## ஒவ்வொரு ஆண்டிலும் லாராவின் ஓட்டங்கள்

| ஆண்டு | வயது | போட்டி | இனி. | ஓட்டம் | சராசரி | அதி.கூ. |
|---|---|---|---|---|---|---|
| 1990 | 20 | 1 | 2 | 49 | 24.50 | 44 |
| 1992 | 22 | 3 | 6 | 195 | 32.50 | 64 |
| 1993 | 23 | 7 | 10 | 586 | 58.60 | 277 |
| 1994 | 24 | 8 | 14 | 996 | 71.14 | 375 |
| 1995 | 25 | 12 | 9 | 1222 | 67.88 | 179 |
| 1996 | 26 | 5 | 9 | 226 | 25.11 | 74 |
| 1997 | 27 | 12 | 21 | 859 | 40.90 | 132 |
| 1998 | 28 | 9 | 15 | 608 | 43.42 | 93 |
| 1999 | 29 | 8 | 15 | 832 | 59.42 | 213 |
| 2000 | 30 | 9 | 17 | 497 | 29.23 | 182 |
| 2001 | 31 | 9 | 18 | 1151 | 63.94 | 221 |
| 2002 | 32 | 7 | 10 | 351 | 35.10 | 73 |
| 2003 | 33 | 10 | 19 | 1344 | 74.66 | 209 |
| 2004 | 34 | 12 | 21 | 1178 | 58.90 | 400* |
| 2005 | 35 | 8 | 15 | 867 | 57.80 | 196 |

## லாராவின் ஒவ்வொரு ஆயிரம் ஓட்டங்கள்

| ஓட்டம் | போட்டி | சராசரி | 100/50 |
|---|---|---|---|
| 1000 | 13 | 52.76 | 2/7 |
| 2000 | 22 | 56.91 | 4/11 |
| 3000 | 31 | 60.96 | 7/16 |
| 4000 | 45 | 54.10 | 10/20 |
| 5000 | 61 | 50.87 | 11/27 |
| 6000 | 73 | 49.21 | 15/30 |
| 7000 | 83 | 50.49 | 18/34 |
| 8000 | 94 | 50.34 | 20/40 |
| 9000 | 101 | 52.69 | 24/43 |
| 10,000 | 111 | 52.91 | 26/45 |
| 11,000 | 121* | 54.04 | 31/46 |



'400 இன் மரியாதை, மதிப்பு'

## எதிரணிகளுக்கு எதிரான செயற்பாடு – துடுப்பாட்டம்

| எதிரணி | போட்டி | இன்னிங்ஸ் | ஓட்டம் | அதி கூடி. | சராசரி | 100 | 50 |
|---|---|---|---|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | 30 | 56 | 2613 | 277 | 43.38 | 8 | 11 |
| பங்களாதேஷ் | 2 | 2 | 173 | 120 | 86.50 | 1 | 1 |
| இங்கிலாந்து | 30 | 51 | 2983 | 400* | 62.14 | 7 | 11 |
| இந்தியா | 13 | 21 | 791 | 103 | 37.66 | 1 | 6 |
| நியூஸிலாந்து | 8 | 12 | 614 | 147 | 51.16 | 1 | 4 |
| பாகிஸ்தான் | 9 | 17 | 725 | 153 | 42.64 | 2 | 2 |
| தென்ஆபிரிக்கா | 18 | 35 | 1715 | 202 | 49.00 | 4 | 9 |
| இலங்கை | 8 | 14 | 1125 | 221 | 86.53 | 5 | 2 |
| சிம்பாப்வே | 2 | 4 | 222 | 191 | 55.50 | 1 | 0 |
| மேற்கிந்தியா சார்பாக | 119 | 210 | 10920 | 400* | 53.52 | 30 | 46 |
| ஐ.ஸீ.ஸி உலக லெவன் சார்பாக | 1 | 2 | 43 | 36 | 20.50 | 0 | 0 |
| மொத்தம் | 120 | 212 | 10941 | 400* | 53.20 | 30 | 46 |

## டெஸ்ட் போட்டிகளில் அதிக 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தவர்கள்

| | போட்டி | இன்னிங்ஸ் | ஓட்டம் | அதிகவடி | சராசரி | 100 | 500 |
|---|---|---|---|---|---|---|---|
| பிறைன் லாரா (மேற்.இந்) | 121 | 214 | 11,204 | 400* | 54.04 | 31 | 46 |
| அலன்போர்டர் (அவுஸ்) | 156 | 265 | 11,174 | 205 | 50.56 | 27 | 63 |
| ஸ்ரீவ் வோவ் (அவுஸ்) | 168 | 260 | 10,927 | 200 | 51.06 | 32 | 50 |
| சச்சின் டெண்டுல்கர் (இந்) | 123 | 198 | 10,134 | 248* | 57.25 | 34 | 41 |
| சுனில் கவாஸ்கர் (இந்) | 125 | 214 | 10,122 | 236* | 51.12 | 34 | 45 |

# தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள — தமிழீழத் தேசியக் கொடி பயன்பாட்டுக் கோவை


**நேற்றைய தொடர்ச்சி....**

கொடியை மிதக்கோடும் சீரான வேகத் தோடும் ஏற்றவேண்டும். கூடுதலான வேகத் துடனோ மிக மெதுவாகவோ ஏற்றக்கூடாது. கொடியையேற்றுபவர் தானே கொடியை யேற்றிக் கயிற்றைக் கொடிக் கம்பத்திற் கட்டவேண்டும். தேசியக் கொடியை ஏற்றும் போது கொடியை விரிப் பதற்கும் கொடி ஒழுங்காக இருக்கி றதா என்பதை உறுதி செய்வதற்கும் கொடி நிலத்திற் படாமல் இருப்பதை உறுதி செய்வ தற்கும் கொடியை ஏற்றுபவருக்கு ஒருவர் உதவ வேண்டும். கொடியையேற்றுபவர் கொடியை ஏற்றியதும் ஓர் அடி பின்னகர்ந்து வணக்க நிலையில் நிற்கவேண்டும். கொடி வணக்கப் பண் முடிவடையும் வரை அனைவ ரும் வணக்க (Salute) நிலையில் நிற்க வேண்டும்.

கொடியிலுள்ள புலியின்பார்வை கொடிக்கம்



## 13. கொடியின் பார்வை



கொடியிலுள்ள புலி யின்பார்வை கொடிக்கம் பத்திற்கு எதிர்ப்புறமாக இருத்தல் வேண்டும். கம் பத்திற்கு எதிர்ப்புறமாக இருத்தல் வேண்டும்.

## 14.தேசியக் கொடியை ஏற்றும் நேரமும் ஒளிபாய்ச் சுதலும்


கொடிக்கம்பத்தில் ஏற்றப்படும் தேசியக் கொடி நாள்தோறும் கதிரவன் எழுந்தற் குப் பின்னர் ஏற்றப்பட்டு மறைவதற்கு முன்னர் இறக்கப்பட வேண்டும்.

மங்கிய ஒளியிற் கொடியை ஏற்றுதல் கூடாது. எனவே காலை 6 மணிக்கு முன்பும் மாலை 6 மணிக்குப் பின்பும் கொடியை ஏற்ற வேண்டுமெனிற் கொடிப் பீடத்திலிருந்து கொடிக்கம்பத்தின் உச்சிவரை போதுமான ஒளிபாய்ச்சப்படவேண்டும். கொடியேற்ற நிகழ்வு நடைபெறும் இடத்திலும் போது மான வெளிச்சம் இருக்கவேண்டும்.

தேசியக் கொடியை முழுமையான வெளிச்சத்தின்கீழ் இருபத்துநான்கு மணி நேரமும் பறக்கவிடலாம். தேசியக் கொடி பொதுவாக மாலை 6 மணிக்கு முன்னர் முறைப்படி இறக்கப்படவேண்டும். கொடி யேற்றித் தொடக்கப்படும் நிகழ்ச்சிகள் மாலை 6 மணிக்குப் பின்னரும் தொடருமா யின் நிகழ்ச்சி முடிவுறும் வரை கொடிக்கு வெளிச்சம் பாய்ச்சப்பட வேண்டும். இரவில் நிகழ்ச்சி முடிவுற்றதும் கொடியை அமை தியான முறையில் இறக்கலாம்.

கொடியேற்றித் தொடக்கப்படும் நிகழ்ச் சிகள் நாட்கணக்கில் தொடருமாயின் அந்த நிகழ்ச்சிகள் முடிவுறும்வரை தேசி யக்கொடி இரவும் தொடர்ச்சியாகப் பறக்க விடப்படலாம். ஆனால் கொடி பறப்பது தெளிவாகத் தெரியக்கூடியவாறு போதிய வெளிச்சம் பாய்ச்சப்படவேண்டும். நிகழ்ச் சிகள் முடிவடைந்தபின் முறைப்படி தேசி யக்கொடி இறக்கப்படவேண்டும்.

## 15. எமது தேசியக்கொடியுடன் வேறு நாடுகளின் தேசியக் கொடிகள்




(கொடிக்கம்பத்தின் முன்பக்கத் தோற்றம்)

தமிழீழத் தேசியக்கொடியுடன் வேறு நாடுகளின் தேசியக்கொடிகளைப் பறக்க விடும்போது ஒரே அளவான கொடிக்கம் பங்களில் கொடிகளை ஏற்றவேண்டும். தமிழீழத் தேசியக்கொடியின் இடப்புறமாக ஏனைய நாடுகளின் தேசியக் கொடிகளை அந்தந்த நாடுகளின் அகரவரிசைப்படி பறக்கவிடவேண்டும். எமது தேசியக் கொடி யும் ஏனைய தேசியக் கொடிகளும் இடைஞ் சலின்றிப் பறக்கக்கூடியவகையிலும் (ஒன்றில் ஒன்று முட்டாமல்) சமனான இடை வெளியிலும் கொடிக்கம்பங்கள் நடப் படவேண்டும். எமது தேசியக்கொடியை ஏற்றியபின்பே ஏனையவற்றை ஏற்ற வேண் டும். ஏனையவற்றை இறக்கியபின்பே எமது கொடியை இறக்கவேண்டும்.

## 16. தேசியக்கொடியும் ஏனைய கொடிகளும்


எமது தேசியக் கொடியுடன் எமது முப் படைகள், காவற்றுறை, படையணிகள், உள் ளூராட்சி மன்றங்கள், திணைக்களங்கள், பள்ளிக்கூடங்கள், கூட்டுறவுச் சங்கங் கள், விளையாட்டுக் கழகங்கள், குமுகாய அமைப் புக்கள் போன்றவற்றின் கொடிகளைப் பக்கவாட்டில் அடுத்தடுத்துள்ள கம்பங் களில் ஏற்றும்போது தேசியக்கொடியின் அளவைவிடச் சிறிய அளவிலான கொடிக ளைத் தேசியக்கொடிக் கம்பத்தை விட 4' உயரம் குறைவான கம்பங்களில் ஏற்ற வேண்டும். அதாவது தமிழீழத் தேசியக் கொடி மற்றக் கொடிகளைவிட 4' கூடுத லான உயரத்தில் இருக்கவேண்டும்.

16. 1. தேசியக்கொடிக்கு இடப்புற மாகச் சமனான இடைவெளியில் ஏனைய கொடிகள் ஏற்றப்படலாம்.




(கொடிக்கம்பத்தின் முன்பக்கத் தோற்றம்)


16. 2. தேசியக்கொடிக் கம்பத்திலி ருந்து ஏழு அடிக்குப்பின்னால் தேசியக் கொடிக்கு இடப்பக்கத்திலும் வலப்பக் கத்திலும் தமிழீழத் தரைப்படை, கடற் படை, வான்படை ஆகிய முப்படை களின் கொடிகளும் காவற்றுறையின் கொடியும் சமனான இடைவெளியிற் பறக்கவிடப் படலாம்.



16.3. தேசியக் கொடிக்குப்பின்னால் 16. (2)இற்கமைவாக முப்படைகளதும் காவற் றுறையினதும் கொடிகளும் அவற்றுக் குப் பின்னாற் போதிய இடைவெளி விட்டுப் படையணிகளின் கொடிகளும் பறக்க விடப்படலாம்.




16.4. உள்ளூராட்சி மன்றங்கள், திணைக் களங்கள், பள்ளிகள், கூட்டுறவுச் சங்கங் கள், விளையாட்டுக் கழகங்கள், குமுகாய வமைப்புக்கள் போன்றவற்றின் கொடி களும் தேவைக்கேற்ப பறக்கவிடப்பட லாம். தேசியக் கொடியுடன் முப்படைகள தும் காவற்றுறையினதும் கொடிகள் பறக்கவிடப்படும் நிகழ்வுகளில் அவற் றுக்குப் பின்னாலேயே மேற்படி கொடி கள் பறக்கவிடப்பட வேண்டும். மேலே கூறப் பட்ட கொடிகளும் படையணிக் கொடிக ளும் ஒரே நிரையிற் பறக்கவிடப் படலாம். உள்ளூராட்சி மன்றங்கள், திணைக்களங் கள் முதலியவற்றின் கொடிகள் நிகழ்ச்சி நடைபெறும் திடலின் பின்புறமாக உட் பக்கத்திலும் பறக்கவிடப்படலாம்.



16. 5. தேசியக் கொடியுடன் இங்கு குறிக்கப்பட்ட ஏனைய கொடிகளைக் கூட்ட மாகப் பறக்க விடும்போது ஏனைய கொடிக் கம்பங்களை விட உயரமான கொடிக்கம் பத்தில் எல்லாக்கொடிகளுக்கும் நடுவில் தேசி யக்கொடியைப் பறக்கவிட வேண்டும்.

தேசியக்கொடி ஏற்றப்பட்ட பின்பே ஏனை யவை ஏற்றப்படவேண்டும் ஏனையவற்றை இறக்கியபின்பே தேசியக் கொடியை இறக்க வேண்டும். அரைக்கம்பத்திற் கொடிகளைப் பறக்கவிடும்போது ஏனைய கொடிகளை அரைக் கம்பத்திற்குக் கொண்டு வந்தபின்பே தேசியக்கொடியை அரைக் கம்பத்திற் குக் கொண்டுவரவேண்டும்.



## 17.ஊர்வலங்களில் தேசியக்கொடியை எடுத்துச் செல்லுதல்

ஊர்வலங்களில் தேசியக்கொடியை வேறு கொடிகளுடன் எடுத்துச் செல்கை யில் ஊர்வலத்தின் முன்னால் வலப்புறத் தில் எடுத்துச் செல்ல வேண்டும். அல்லது





நடுவரிசையில் மற் றைய கொடிகளுக்கு முன்னால் எடுத்துச்செல்ல வேண்டும். வேறு எந்தக் கொடியை ஏந்திச் செல்ப வரும் எமது தேசியக் கொடியை முந்திச் செல்லக் கூடாது. தேசியக்கொடியை நெஞ்சுக்கு நேராகவோ வலத்தோளிலோ ஏந்திச்செல்ல வேண்டும்.

## 18. ஊர்திகளில் தேசியக் கொடியைப் பறக்கவிடுதல்

ஊர்தியின் முன்புறத்தில் உறுதியா



கப் பொருத்தப்பெற்ற கம்பத்திற் பறக்க விடவேண்டும். ஊர்தியின் தொளைமூடி யின் (**Bonet**) மேல் இரண்டடி உயரத்திற் கம்பம் இருத்தல்வேண்டும்.

உந்துருளிகள் மிதிவண்டிகள் ஆகிய




வற்றின் முன் வலப் புறத்தில் தேசியக் கொடியைப் பறக்க விடலாம். உந்துருளிகள் மிதி வண்டிகள் ஆகியவற்றின் முன் வலப் புறத்தில் தேசியக்கொடி யைப் பறக்கவிடலாம்.

## 19. மிசையத்தில் தேசியக்கொடியை வைத்தல்




அரசுத் தலைவர் மற்றும் முதன்மை மாந்தரின் மிசையங்களில் தேசியக் கொடியை வைக்கும்போது மிசையத்தின் வலப்புறத் தில் வைத்தல்வேண்டும். வேறு கொடிகளும் வைக்கப்படுமாயின் அவை இடப்புறத்தில் வைக்கப்படவேண்டும். தேசியக்கொடிக்கு முதன்மை வழங்கவேண்டும்.

## 20. ஈமப்பேழையின்மீது தேசியக்கொடியைப் போர்த்துதல்



மாவீரர், காவற்றுறை மாவீரர், தேசியத் துணைப்படை மாவீரர் மற்றும் தேசக் காப்புப்பணியில் ஈடுபடும் வீரர், நாட்டுப் பற்றாளர் ஆகியோரின் உடல் வைக்கப் பட்ட ஈமப்பேழையின்மீது தேசியக் கொடி யைப் போர்த்தும் போது புலியின் தலைக்கு மேலுள்ள பகுதி பேழையின் தலைப்பகுதி யில் இருக்குமாறு போர்த்த வேண்டும். அவ்வாறு போர்த்தப்பெற்ற தேசியக்கொடி யைப் போர்த்தப் பெற்றவரின் இரத்த உற வினரிடம் பேணிப்பாதுகாக்கும் பொருட்டு வழங்கலாம். இறந்தவரின் தாயகப் பற்றை மதிப்பதற்காக அவரின் ஈமப்பேழைமீது போர்த்தப்பெற்ற தேசியக்கொடியைப் பறக்க விடலாம்.


## 21. துயர நிகழ்வின் போது கொடியேற்றுதல்



தேசியத் துயர நிகழ் வுகளின்போது கொடி யேற்றுகையிற் கொடி யைக் கம்பத்தின் உச் சிக்கு ஏற்றி, பின் அரைக் கம்பத்துக்கு இறக்கிக் கட்ட வேண்டும். அரைக் கம்பத்தில் உள்ள கொடியை இறக்கும் போது முதலிற் கொடிக் கம்பத்தின் உச்சிக்கு ஏற்றி, பின் இறக்க வேண் டும். தேசத்தலைவரின் முறைப் படியான அறிவுறுத்தலுக்கு இணங்கவே தேசியக் கொடியை அரைக்கம் பத்திற் பறக்கவிட லாம். வேறெந்த வேளையிலும் அரைக் கம்பத்திற் பறக்கவிடக் கூடாது. தேசியக் கொடியை எத்தனை நாட்களுக்கு அரைக் கம்பத்திற் பறக்கவிட வேண்டுமென்பது தேசத்தலைவரின் அறிவுறுத்தலிற் குறிப் பிடப்பட வேண்டும். கம்பத்தோடு நிலை யாகப் பொருத்தப்பட்ட தேசியக் கொடி யைத் தேசியத்துயர நிகழ்வுகளின் போது அரைக்கம்பத்திற்குக் கொண்டு வரமுடியாது. அவ் வேளையில் தேசியக் கொடிக் கம்பத் தில் 3'x2' அளவுள்ள கறுப் புக்கொடியை அரைக்கம்பத்திற் பொருத் திவிடலாம்.

## 22. கொடிகளைத் தொங்கவிடுதல்





உயரத்திற் கொடிகளைத் தொங்கவிட லாம். போக்குவரத்திலுள்ள எந்த ஊர் தியிலும் கொடி படாதவகையில் உயர மான கம்பங்களை இருமருங்கும் நிறுத்தி உறுதியான கயிற்றினை இணைத்துத் தொங்கவிடலாம். கொடி கட்டப்படும் கயிறு மிகவும் உறுதியானதாக இருக்கவேண்டும். கொடிக்கயிறு அறுந்து கொடி கீழே விழு வது தேசத்துக்கு இழுக்காகும். கொடி யைக் கயிற்றில் இணைக்கும்போது புலி யின் தலைக்கு மேலேயுள்ள பகுதி கயிற் றுடன் இணைக்கப்படவேண்டும். புலியின் பார்வை வலப்புறமாக இருக்கவேண்டும்.


(... பக்கம் பார்க்க)

# தமிழீழ விடுதலைப்புலிகள்.....

(...ஆம் பக்கத் தொடர்ச்சி....)


அதாவது கொடிக்கு எதிரே நிற்பவரின் இடப் புறத்தைப் பார்த்தவாறு புலியின் பார்வை அமையவேண்டும். புலியின்பார்வை நிலத்தைப் பார்த்தவாறோ வானைப் பார்த்தவாறோ அமையக்கூடாது.

### 23. குறுக்குக் கம்பங்களிற் கொடியைப் பறக்கவிடுதல்



தமிழீழத் தேசியக் கொடியையும் வேறொரு தேசத்தின் தேசியக் கொடியையும் குறுக்குக் கம்பங்களிற் பறக்கவிடும்போது தமிழீழத் தேசியக்கொடி வலப்புறமாக இருக்க வேண்டும். அதாவது பார்வையாளருக்கு இடப்புறமாக இருக்கவேண்டும். மேலும் தமிழ்ழத் தேசியக் கொடியின் கம்பம் முன்னாலும் மற்றக்கொடியின் கம்பம் பின்னாலும் இருக்கவேண்டும்.

### 24. கட்டடங்களிற் கொடியைப் பறக்கவிடுதல்



சாளர அடிக்கட்டை, முகப்புமாடம் ஆகிய வற்றிற்கிடையாகவோ கோணவடிவிலோ கொடியைப் பறக்தவிடும்போது கொடி, கம்பத்தின் உச்சியில் இருக்க வேண்டும். கிடையாகப் பறக்கவிடும்போது புலியின் பாரவை வலப்புறமாக இருக்கக்கூடிய வகையிற் புலியின் தலைக்கு மேலுள்ள பகுதியே கம்பத்துடன் இணைக்கப்படவேண்டும். கோணவடிவிற் பறக்கவிடும்போது அணி வகுப்புக் கொடியை இணைப்பது போன்று அதாவது எழுச்சிக் கொடியைக் கம்பத்தில் இணைப்பது போன்று இணைக்க வேண்டும்.

### 25. மேடைகளில் தேசியக்கொடி



கூட்ட மேடைகளிற் பேச்சாளரின் தலைக்கு மேலாகப் பின்புறத்தட்டியில் தேசியக் கொடியைக் கட்டலாம். 9 அடி உயர நிறுத்தியிற் பொருத்தப்பெற்ற தேசி யக்கொடியை மேடையின் வலப் புறத்திற் பேச்சாளருக்கு முன்னால் வைக்கலாம. ஏனைய கொடிகள் இடப்புறத்தில் வைக்கப்படலாம்.

### 26. தேசியக்கொடியை இறக்குதல்

தேசியக்கொடி ஏற்றப்படுவது போன்றே இறக்கப்படுவதும் ஒழுங்குமுறையிலான சிறப்பு நிகழ்வாகவே இருக்கவேண்டும். கொடியை இறக்குபவரும் முதன்மையானவராக, தகுதியானவராக இருத்தல் வேண்டும். கொடியேற்றுபவர் நிகழ்ச்சியின் இறுதிவரை இருந்தால் அவரே கொடியை இறக்குதல் வேண்டும்.

தேசியக்கொடி இறக்கப்படும் போது நிலத்தில் விழாது கைக்கு எட்டக்கூடிய உயரத்தில் வைத்தே கைகளில் ஏந்தி எடுத்தல் வேண்டும். தேசியக்கொடி இறக்கப்படும் நிகழ்வின் போது எவரும் கையொலி எழுப்பக்கூடாது. அந் நிகழுவு அமைதியாக நடைபெறவேண்டும்.

### 27. கொடி வணக்க நிகழ்வை ஒழுங்குசெய்பவர்களுக்கு

தேசியக்கொடியை ஏற்றுகின்ற நிகழ்வின்போது தவறுகள், தடங்கல்கள் ஏற்படாது இருப்பதற்கு நிகழ்ச்சி தொடங்குவதற்கு முற்கூட்டியே தேசியக்கொடியைக் கம்பத்தில் ஏற்றி ஒத்திகை பார்த்தல் வேண்டும். தேசியக்கொடி தலைகீழாக அல்லாமல் நேராக இருக்கின்றதா?

தேசியக்கொடியிற் கயிறு கோர்ப் பதற்கான மடிப்பு புலியின் பார்வைக்கு எதிர்ப் புறமாகத் தைக்கப்பட்டிருக்கின்றதா?

கொடி கிழியாமல், மங்காமல் ஏற்றக் கூடிய நிலையில் இருக்கின்றதா? நிகழ்வில் எற்றப்பட இருக்கும் வேறு நாடுகளின் தேசியக்கொடி தவிர்ந்த ஏனைய கொடிகள் தேசியக்கொடியை விடச் சிறிதாக இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதா? கொடியை ஏற்றுவதற்கான கயிறு கொடிக் கம்பத்தின் உயரத்தைவிட இருமடங்கிற்குக் குறையாமலும் உறுதியாகவும் இருக்கின்றதா?

தேசியக்கொடி ஏற்றப்படும் கொடிக்கம்பம் உறுதியாக நாட்டப்பட்டிருக்கின்றதா?

கொடிக்கம்பம் தேசியக்கொடி ஏற்றுவதற்கு வேண்டிய உயரத்தை, உறுதியை உடையதாக இருக்கின்றதா? என்பவற்றையெல்லாம் முற்கூட்டியே உறுதிசெய்து கொண்டால் கொடியேற்ற நிகழ்வில் எவ்வகைத் தவறோ தடங்கலோ ஏற்படாது தவிர்ககலாம். தேசியக்கொடியேற்ற நிகழ்வில் ஏற்படும் தவறுகள், தடங்கல்களுக்கு நிகழ்ச்சியை ஒழுங்குசெய்யும் பொறுப்பாளரே பொறுப்பாவார்.

### 28. தேசியக் கொடியை அகற்றுதல்

நீண்டகாலப் பயன்பாட்டின்போது நரைத்தல், இற்றுப்போதல் போன்றவற்றாற் பழுதடைந்து தேசத்தின் சின்னமாகப் பயன்படுத்த முடியாத நிலைக்கு வரும் தேசியக் கொடிகளை அகற்றிவிட வேண்டும. வ்குக்கப்பட்ட முறைக்கிணங்க அகற்றும் நிகழ்வு நடைபெறும்.

### பயன்படுத்த முடியாத கொடிகளைச் சேர்த்தல்

பழுதடைந்த கொடிகளை வட்டார அரசியற் செயலகங்களினூடாக ஆறுமாதத்திற்கொரு முறை சேர்க்கவேண்டும். சேர்க கப்பட்ட கொடிகள் முழுவதும் தலைமைச்செயலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

### பழுதடைந்த கொடிகளை ஆய்வு செய்தல்

தலைமைச் செயலகச் செயலரோ அவரால் அமர்த்தப்பெறும் தகுதிவாய்ந்த ஒருவரோ குழுவோ சேர்க்கப்பட்ட கொடிகள் அனைத்தையும் அவை எதிர்காலத்திற் பயன்படுத்த முடியாதபடி பழுதடைந்துள்ளனவா என்பதை ஆராய்ந்து உறுதிப்படுத்தவேண்டும். பயன்படுத்த முடியாதவையென உறுதிப்படுத்தப்பட்ட கொடிகளுக்கு இறுதிச் சடங்கும் அகற்றுஞ் சடங்கும் ஒதுக்குப்புறமான வெவ்வேறு இடங்களில் மாலை நேரத்தில் இருள் சூழ்வதற்கு முன் நடைபெறவேண்டும்.

### இறுதிச் சடங்கு

அகற்றப்படவிருக்கும் எல்லாக் கொடிகளையும் நிகராண்மைப்படுத்தும் ஒரு கொடியைத் தெரிவுசெய்து இந்நிகழ்விற் பயன்படுத்தவேண்டும். தற்போது பயன்படுத்தப்படும் கொடிக்காக ஒருவரும் நிலையாக ஓய்வு கொடுக்கப்படவிருக்கும் கொடிக்காக மற்றொருவருமாக செங்காவலர் (சிவப்பு நிறப் பரேத் தொப்பி அணிந்திருக்க வேண்டும்) இருவர் தேர்ந்தெடுக்கப்படுவர். மொத்தமாக எழுவருக்குக் குறையாதோர் இந்நிகழ்விற் கலந்துகொள்ள வேண்டும்.

பகல் முழுவதும் பறந்துகொண்டிருக்கும் கொடிக்குப் பொதுவான சடங்கு முறைகளுக்கிணங்கப் பொழுது கருகுவதற்கு முன் ஓய்வு கொடுக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட செங்காவலரில் ஒருவர் இப்பணியைச் செய்வார்.

இறுதி மதிப்புப் பெறவிருக்கும் கொடியைக் கையாள்வதற்காகத் தெரிவுசெய்யப்பெற்ற செங்காவலர் முன்னுக்குச் சென்று நடுவே நிற்பார். இறுதிமதிப்புச் செலுத்தப்பெற்று அகற்றப்படுவதற்காகத் தெரிவு செய்யப்பெற்ற கொடியைத் தலைவர் செங்காலவரிடம் கையளிப்பார். பின்னர் கொடியை ஏற்றுமாறு கட்டளையிடுவார். வழமையாகக் கடைப்பிடிக்கப்படும் சடங்குகளுடன் கொடியேற்றப்பட்டுக் கொடிக்கம்பத்தின் உச்சியைக் கொடி அடைந்ததும் தலைவர் பின்வருமாறு உரையாற்றுவார்:-

இந்தக் கொடி எமது தாயகத்திற்காக நீண்டகாலம் நன்கு பணியாற்றியுள்ளது. எதிர்காலத்தில் எமது தேசத்தை நிகராண்மைப்படுத்த முடியாத அளவுக்குப் பழுதடைந்துவிட்டது. பணியிலிருந்து முழுமையான ஓய்வு கொடுப்பதற்காக இன்று தெரிவு செய்யப்பட்டிருக்கும் எல்லாக் கொடிகளையும் இக்கொடி நிகராண்மைப்படுத்துகிறது. இக்கொடியை வணங்குவதன் மூலம் எல்லாக் கொடிகளுக்கும் மதிப்பளிக்கிறோம்

உரையின்பின் தலைவர், உறுப்பினர் அனைவரையும் கவனநிலைக்கு (Attention) அழைப்பார் வணக்கஞ் (Salute) செய்யும்படி பணிப்பார் உறுதிமொழியை முன்மொழிவார். கொடிக்கு ஓய்வளிக்குமாறு கட்டளையிடுவார். செங்காவலர் மெதுவாகவும் சடங்கு முறைகளுக்கமைவாகவும் கொடியை இறக்குவார். பின்னர் உரிய மதிப்புடன் வழக்கம்போல முக்கோணமாக மடித்துத் தலைவரிடம் வழங்குவார். குழு கலைக்கப்படுவதுடன் இறுதிமதிப்புச் சடங்கு முடிவுறும்.

### எரியூட்டும் சடங்கு

ஒதுக்குப்புறமான வேறோரிடத்தில் எரியூட்டுஞ் சடங்கு நடைபெறும். கொடிகளை எச்சமெதுவுமின்றி முழுமையாக எரிக்கக்கூடிய வகையில் தீ மூட்டப்படும். முக்கோணமாக மடிக்கப்பட்டிருக்குங்கொடி, சடங்கு தொடங்குமுன் ஈமப்பேழையின் சாயலையுடைய செவ்வகமாக மடிக்கப்படும். எல்லோரும் நெருப்பைச் சூழ்ந்து நிற்பர். தலைவர் எல்லோரையும் கவன நிலைக்கு (Attention) அழைப்பார். செங்காவலர் முன்னே வந்து கொடியைத் தீயிலிடுவார். எல்லோரும் விரைந்து வணக்கஞ் (Salute) செலுத்துவர். வணக்கஞ் செலுத்தியபின் அனைவரும் கவன நிலைக்கு வருவர். தேசியப்பண இசைத்தல், உறுதி மொழி உரைத்தல், கொடியின் மேண்மையை உரைத்தல் போன்றவற்றைத் தலைவர் நிகழ்த்துவார்.


கொடி எரிந்ததும் குழுத்தலைவரையும் செங்காவலரையுந் தவிர ஏனையோர் கலைந்து ஒரே வரிசையில் அமைதியாகச் செல்வர். தலைவரும் செங்காவலரும் அங்கேயே நின்று கொடி முற்றுமுழுதாக எரிந்துவிட்டதென்பதை உறுதிசெய்வர். ஏனைய கொடிகளையுந் தீயிலிடுவர். எல்லாக கொடிகளும் முழுமையாக எரிந்த பின் நெருப்பு அணைக்கப்படும். சாம்பர் முழுவதும் கவனமாகப் புதைக்கப்படுவதுடன் நிகழ்ச்சி முடிவடையும். (முற்றும்)

## புலம்பெயர் நாடுகளில் மாவீரர் நாள் நிகழ்வுக் காட்சிகள்



கனடா ரொறன்ரோ மாநிலத்தில்...







சுவீடனில்....







தென்னாபிரிக்காவில்...

# சிரிப்பிருந்தால் நோயில்லை



நடந்தது, நடப்பது நடக்கப் போவது என எல்லாவற்றையும் நினைத்துக் குழம்பி சதா சர்வகாலமும் கவலையிலேயே கழிகிறதா உங்கள் வாழ்க்கை? அப்படியானால் உங்களுக்குத்தான் இந்த செய்தி....

காலையில் எழுந்தது முதல் வேலைக்குப் போகிற வரை நீங்கள் எத்தனை முறை சிரிப்பீர்கள்? 'சிரிக்க ஏது காலை நேரம்?' என்று கேட்காதீர்கள். காலையில் கண் விழித்ததும் உங்கள் கணவரைப் பார்த்து, குழந்தைகளைப் பார்த்து, அக்கம் பக்கத் தினரைப் பார்த்து லேசான புன்னகையை வீசிப் பாருங்களேன். அன்றைய பொழுது அமர்க்களமாகத் தொடங்கும்.

நினைத்து நினைத்துப் பூரித்துப் போகிற அளவுக்கு உங்களுக்குள் ஏதேனும் சந்தோஷ நினைவுகள் இருக்கும். அவற்றை தினம் ஒருமுறை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

தினம் உங்களால் முடிந்த ஏதேனும் ஒரு உதவியைச் செய்வதைப் பழக்கிக் கொள்ளுங்கள். கண்பார்வை தெரியாத ஒருவருக்கு சாலையைக் கடக்க உதவலாம். பேருந்தில் பயணம் செய்யும்போது முதியவர்களுக்கு எழுந்து இடம் கொடுக்கலாம். இதெல்லாம் கூட உதவிகள்தான். செய்து பாருங்கள். அதன் சந்தோஷத்தை உணர்வீர்கள்.

உங்களுக்கு எதெல்லாம் சந்தோஷம் தரும் செயல்கள் என்று பட்டியல் போட்டுக் கொள்ளுங்கள். அது சாக்லெட் சாப்பிடுவதாகவும் இருக்கலாம், மழையில் நனைவதாகவும் இருக்கலாம். பிடித்த பாடலை முணுமுணுப்பதாகவும் இருக்கலாம். உங்களுக்கு சந்தோஷம் தரும் என்று உணர்கிற செயல்களை அடுத்தவர்களுக்குப் பாதிப்பில்லாத பட்சத்தில் தாராளமாகச் செய்யலாம். கடந்த காலம் எதிர்காலம் இரண்டையும் பற்றிய கவலைகளை விட்டொழியுங்கள். நிகழ்காலம் மட்டுமே நிச்சயமானது. அந்த நிமிட சந்தோஷம்தான் வாழ்க்கையில் பெரிது என்று எண்ணிக் கொள்ளுங்கள்.

சுவாசப் பயற்சியைத் தெரிந்துகொண்டு தினம் படுக்கச் செல்வதற்கு முன்பாக சில நிமிடங்கள் செய்து வரவும். அது உங்களுக்குள் இருக்கும் நெகட்டிவ் எண்ணங்களை விரட்டும். அமைதியான தூக்கத்தையும் தரும்.

எப்பேர்ப்பட்ட துக்கத்தையும் சுலபமாக அணுகக்கூடிய நபர்களுடன் நட்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்கள் உங்கள் டென்ஷனையும், சோகத்தையும் நீக்கி உங்கள் மனதை லேசாக்குபவராக இருக்கவேண்டும். சந்தோஷமாகச் செல்லும் உங்களையும் சோகமாக்கித் திருப்பியனுப்பும் நபர்களிடமிருந்து விலகியே இருங்கள்.

வாழ்க்கையில் எல்லா விஷயங்களையும் நகைச்சுவையோடு அணுகக் கற்றுக்கொள்ளுங்கள். எந்த ஒரு விஷயத்தையும் அதன் எதிர்மறையாகப் பார்க்காமல் சார்பாகப் பாருங்கள்.

சிரிப்பை மாதிரி அற்புத மருந்து வேறில்லை என்கிறார்கள் மருத்துவர்கள். சிரிக்கும் போது நீங்கள் அதிகளவு ஒட்சிசனை சுவாசிக்கிறீர்களாம். அது உடலின் பல பிரச்சினைகளைத் தீர்க்கிறதாம். இரத்த அழுத்தத்தையும் இதயத் துடிப்பையும் சீராக்கி தசைப் பிடிப்பையும் சரி செய்கிறதாம். சிரித்துக் கொண்டே இருப்பவர்களை எந்த வியாதியும் சீக்கிரம் அண்டுவதில்லையாம் முதுமை உட்பட...

# கர்ப்பிணிகளுக்கான ஆலோசனை



கர்ப்பம் தரித்த நாள் முதல் கொஞ்சம் அக்கறை செலுத்தினால் பிரசவத்திற்குப் பிறகும் அழகான தோற்றத்தை தக்கவைக்கலாம். அதற்கு சில ஆலோசனைகள்,

* கர்ப்ப காலத்தில் உடற்பயற்சி செய்யலாம். ஆனால் மருத்துவரின் ஆலோசனையைக் கேட்ட பிறகே செய்ய வேண்டும். ஏனெனில் உடலில் வேறு ஏதேனும் பிரச்சினைகள் இருக்கும்போது உடற்பயிற்சிகளைச் செய்தால் பிரச்சினை பெரிதாக வாய்ப்புண்டு. வீட்டு வேலைகளான பெருக்கித் துடைப்பது, துணி துவைப்பது போன்றவையே அருமையான உடற்பயிற்சிகள் தான். முதல் மூன்று மாதங்களுக்குப் பிறகு தினமும் 5 கி.மீ தூரம் நடக்கலாம்.
* கர்ப்ப காலத்தில் இருவருக்கும் சேர்த்து உண்ண வேண்டும் எனச் சொல்லிச் சொல்லியே கர்ப்பிணிப் பெண்ணுக்கு ஏகப்பட்ட உணவை வைத்துத் திணிப்பார்கள். இது தவறு. கர்ப்பமாக இருக்கிற பெண் போஷாக்கான ஆகாரத்தை சாப்பிட்டாலே போதும். புதிய காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும். தேவைக்கதிகமாக சாப்பிடுவது பிரசவத்திற்குப் பிறகு உடல் எடை அதிகரிக்க வழிவகுத்து விடும்.
* போதியளவு ஓய்வு என்பது கர்ப்பிணிகளுக்கு மிகமிக முக்கியம். இரவில் எட்டு மணி நேரமும் பகலில் குறைந்தது ஒரு மணிநேரமும் தூக்கம் அவசியம்.
* முதல் மூன்று மாதங்களுக்கு அதிகளவு உடல் அதிர்வின்றி இருக்க வேண்டியது முக்கியம். மெதுவாக நடப்பது நல்லது. வேகமாக நடப்பது ஓடுவது போன்றவை தவிர்க்கப்பட வேண்டும்.
* ஆட்டோ, இரண்டு சக்கர வாகனம் போன்றவற்றில் பயணம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும்.
* ஒலிவ் ஆயில் அல்லது பேபி ஆயிலைத் தடவி வயிற்றை மென்மையாக மசாஜ் செய்து விடலாம். நான்காம் மாதம் தொடங்கி வயிற்றில் விற்றமின் ஈ எண்ணெய் அல்லது நல்லெண்ணெயும், மஞ்சளும் குழைத்துத் தடவி வருவது வயிற்றில் தழும்புகள் ஏற்படாமல் காக்கும். மார்பகக் காம்புகளை சுத்தமான தண்ணீர் கொண்டு சுத்தப்படுத்த வேண்டும். பிரசவத்திற்கு முன்பிருந்தே இதைச் செய்து வருவது நல்லது.




# நீரிழிவில் நீங்கள் எந்த வகை?

நீரழிவு நோயில் 3 வகைகள் உண்டு. இவற்றில் நோயாளி எந்த வகையினால் பாதிக்கப்பட்டவர் என்று முதலில் கண்டுபிடிக்க வேண்டும். இது நோயின் தன்மையைப் பொறுத்து சிகிச்சையைத் தொடர வசதியாக இருக்கும்.



நீரிழிவு பார்ப்பதற்கு ஒன்றும் பயங்கரமானதாகத் தெரியாவிட்டாலும் கூட இருந்தே குழி பறப்பது என்று சொல்வதைப் போல நீண்ட நாள் உடலில் இருந்து கொல்லக் கூடியது. மருத்துவத்தில் எத்தனையோ சாதனைகள் செய்து விட்டாலும் கூட இன்னும் தீர்வு காணப்படவில்லை.

சரி இந்த நோயின் வகை பற்றித் தெரிந்து கொள்வோமா?

*முதல் வகை:* இந்த வகை உடலில் பான்கிரியாஸ் என்ற உறுப்பு இன்சுலினை கொஞ்சமாகச் சுரப்பது அல்லது சுத்தமாக சுரக்காமல் போவதால் வருவது. உடலில் சர்க்கரையைப்பயன்படுத்தி சக்தியைப்பெற இந்த இன்சுலின் முக்கியமாகத் தேவைப்படுகிறது. சுமார் 10 சதவிகிதம் பேர் இந்த முதல் வகை நீரிழிவினால் பாதிக்கப்படுவதாக ஒரு புள்ளி விபரம் தெரிவிக்கிறது.

*இரண்டாம் வகை:* பான்கிரியாஸ் உடலுக்குத் தேவையானளவு இன்சுலினைச் சுரக்காதபோது அல்லது உடலானது இன்சுலினைச் சரியாகப் பயன்படுத்தாத போது இந்த வகை நீரிழிவு உண்டாகிறது. சுமார் 90 சதவீதம் பேர் இந்த வகை நீரிழிவினால் பாதிக்கப்படுகிறார்கள். *ஜெஸ்டேஷனல்:* தற்காலிகமாகத் தோன்றும் இந்த வகையானது பெரும்பாலும் கர்ப்பிணிப் பெண்களுக்கும் ஏற்படுகிறது. கர்ப்பிணிகளில் சுமார் 2 முதல் 4 வீதம் வரை இது பாதிக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கும் இது கர்ப்பிணிப் பெண்ணையும் வயிற்றில் வளரும் குழந்தையையும் பாதிக்கிறது. நீரிழிவு நோய்க்கான காரணம் சரிவர கண்டுபிடிக்கப்படவில்லை என்றாலும் பலவிதக் காரணங்கள் இருப்பதாக மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்.

இரண்டாம் வகை நீரழிவு நோய் அளவுக்குஅதிகமான உடல் பருமன் கர்ப்பிணிப் பெண்களில் சுமார் 4 கிலோவுக்கும் அதிகமான எடையுடன் குழந்தை பிறப்பது போன்ற அறிகுறிகளுடன் காணப்படும். வாழ்க்கை முறையை மாற்றுதல் அதன் மூலம் அதிக உடல் எடையைக் குறைத்தல் உடற் செயலை அதிகரித்தல் போன்றவற்றின் மூலம் இந்த வகை நோயை ஓரளவு கட்டுக்குள் கொண்டு வரலாம்.

முதல் வகை நோயானது அடிக்கடி சிறுநீர் கழித்தல், வழக்கத்துக்கு மாறான தாகம், அதிகப்பசி, திடீரென உடல் எடை குறைதல், சோர்வு அல்லது களைப்பு போன்ற அறிகுறிகளுடனும், இரண்டாம் வகையானது அடிக்கடி உடல் நிலை பாதிக்கப்படுதல், மற்றும் சீக்கிரம் ஆறாத புண் அல்லது காயம் போன்ற அறிகுறிகளுடன் காணப்படும்.

எனவே நீரிழிவு நோயாளிகள் தகுந்த மருத்துவரை அணுகி பரிசோதித்து வரும் முன் பாதுகாத்துக் கொள்வது நல்லது.

# அதிக ஒலியா? குழந்தைகளின் பேசும் திறன் பாதிப்படையும்!



உங்கள் செல்லக் குழந்தைகள் வாய் திறந்து பேச நீண்டநாள் எடுத்துக் கொள்கிறார்களா? அப்படியானால் அவர்களை சுற்றியுள்ள ஒலி அளவை தீவிரமாகக் கண்காணியுங்கள்.

ஏனெனில் அதிகமாக சத்தமான இடங்களில் வசிக்கும் குழந்தைகள் பேசுவதற்கு சிறிது கூடுதலான நேரம் எடுத்துக்கொள்வதாக உளவியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.


சுற்றி இருக்கும் சத்தத்தைக் காட்டிலும் குழந்தைகள் எழுப்பும் வார்த்தைகள் அதிக ஓசையுடன் இல்லாத வரையில் அவர்கள் பேசுவதற்கான காலம் தாமதமாகிக் கொண்டே செல்லும்.

அமெரிக்காவின் மேரிலாண்ட் பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த உளவியல் நிபுணர்கள் குழந்தைகள் எப்படி பேசக் கற்றுக்கொள்கிறார்கள்? இதில் மூளை வளர்ச்சியின் பங்கு என்ன? என்ற கேள்விகளுக்கு விடை காணும் வகையில் ஆய்வு ஒன்றைச் செய்தனர்.

5 முதல் 9 மாதம் வரையிலான 100 குழந்தைகள் இதில் கலந்துகொண்டனர். அவர்களில் பாதிக் குழந்தைகளிடம் பின்னணியில் எந்தச் சத்தமும் இல்லாத நிலையில் நன்றாக அறிமுகமான வார்த்தைகள் பேசப்பட்டன. மீதிக் குழந்தைகளிடம் சத்தமான பின்னணி சூழ்நிலையில் அறிமுகம் இல்லாத வார்த்தைகள் பேசப்பட்டன.

இதில் அதிகமான சத்தம் உள்ள சூழ்நிலையில் வார்த்தைகள் பேசப்பட்ட குழந்தைகள் தங்களிடம் சொல்லப்பட்ட வார்த்தைகளை புரிந்துகொள்ள நீண்டநேரம் பிடித்ததுதெரிய வந்தது. இதிலிருந்து அமைதியான சூழ்நிலையில் குழந்தைகள் தங்களிடம் சொல்லப்படும் வார்த்தைகளை எளிதில் புரிந்துகொள்கின்றமை கண்டறியப்பட்டது.

# நொறுக்குத் தீனி பிரியர்களுக்கு எச்சரிக்கை!



நொறுக்குத்தீனி தின்பதைப் பழக்கமாகக் கொண்டவர்களின் உடம்பில்இரும்புச்சத்து குறைபாடு உண்டாகும் என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

குழந்தைகள் முதல் முதியோர் வரை நெறுகுக்குத் தீனிப் பழக்கத்தைக் கொண்டவர்களைக் கணக்கெடுத்துப் பார்த்தால் ஆச்சரியம் கலந்த அதிர்ச்சிதான் வரும்.

ஆம் இந்தப் பழக்கம் பணக்கார வீட்டுப் பிள்ளைகளிடம் மட்டுமில்லாது சாதாரண கூலித் தொழிலாளியின் பிள்ளைகளிடமும் நாம் காணலாம். அவ்வளவு ஏன்? வி.ஐ.பிக்கள் என நாம் அழைக்கும் முக்கியமான சிலரும் கூட இந்தப் பழக்கத்திற்கு ஆளாகி இருப்பதைக் காணலாம்.

சில பெரிய எழுத்தாளர்கள் எழுதும் போது எதையாவது கொரித்துக் கொண்டே தான் எழுதுவார்கள்.


இப்படி நொறுக்குத்தீனி தின்னும் பழக்கம் உடையவர்களின் உடலில் இரும்புச்சத்து குறைகிறது என மருத்துவ நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர்.

பெண்களுக்கு மாதவிடாய் அதிகமாவதாலும், குழந்தை பிறப்பு, கண்டபடி நொறுக்குத்தீனி தின்பதாலும் உடலில் இரும்புச் சத்து குறைபடுகிறது. இந்தக் குறையைச் சரி செய்ய இரும்புச்சத்து மாத்திரைகளை மருத்துவரின் ஆலோசனைப்படி உட்கொண்டுவர வேண்டும்.

சில பெண்கள் உடலை ஸ்லிம் ஆக வைத்துகக்கொள்ள வம்புக்குப் பட்டினி கிடப்பார்கள். இதனால் சத்தான உணவையும் தவிர்த்துவிடுவார்கள். அப்படிப்பட்டவர்கள் 500 மில்லி கிராம் விற்றமின் சி-மாத்திரைகளை தினம் ஒன்று அல்லது இரண்டு வீதம் சாப்பிட்டுவரலாம். மேலும் விற்றமின் பி காம்ப்லக்ஸ், மக்னீசியம், சிட்ரேட் போன்றமாத்திரைகளையும் சாப்பிடலாம்.

# இந்திய அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி!

## இந்திய – தென்னாபிரிக்கா ஒருநாள் தொடர் சமனில் முடிந்தது



இந்தியா- தென்னாபிரிக்கா கிரிக்கெற் அணிகளுக்கு இடையிலான 5ஆவதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டியில் இந்திய அணி 5விக்கெட டுக்களால் வெற்றி பெற்று ஒருநாள் தொடரைச் சமன் செய்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித்தலைவர் டிராவிட் களத் தடுப்பை தேர்ந்தெடுத்தார். தென்னாபிரிக்க தொடக்க வீரர்களாக தலைவர் கிரேம் ஸ்மித், அன்ட்ரூ ஹோல களமிறங்கினார்கள்.

ஸ்மித் வழமையான அதிரடியாக ஆடினார். எனினும் வேகப்பந்து வீச்சாளர் பதானின் பந்தில் அணி 6 ஓட்டங்களைப் பெற்ற போது ஹோல் 4(7) ஓட்டங்களுடன் பதானின் பந்தில் போல்ட்டாகி ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஸ்மித்துடன் இணைந்த கலிஸ நிதானமாக துடுப்பெடுத்தாடினார்.

எனினும், அணியின் ஸ்கோர் 36 ஓட்டங்களைப் பெற்றபோது ஸ்மித் 24(29) ஓட்டங்களில் பதானின் பந்தில் ஹர்பஜனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து கலிஸ் உடன் பிரின்ஸ் இணைந்தா. இந்திய அணியின் சிறந்த களத் தடுப்பு, பந்துவீச்சினால் தென்னாபிரிக்க அணியின் ஓட்டக் குவிப்பு வேகத்தை மட்டுப்படுத்தினர். நிதானமாக கலிஸ் உடன் விளையாடிக்கொண்டிருந்த பிரின்ஸ, அணி ஸ்கோர் 77 ஓட்டங்களைப் பெற்றபோது 32 பந்துகளின் 9 ஓட்டங்களைப் பெற்று ஹர்பஜனின் பந்தில் யுவராஜிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய பவுச்சர் கலிஸ உடன் இணைந்து சிறப்பாக ஆடி ஓட்ட வேகத்தினை உயர்த்தினார்கள். எனினும் அணி ஸ்கோர் 158 ஓட்டங்களைப் பெற்ற போது பவுச்சர் 35 (56) ஓட்டங்களைப் பெற்று சேவாக்கின் பந்தில் ஹர்பஜனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.அடுத்து களமிறங்கிய தென்னாபிரிக்க அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் கேம்ப் அணி ஸ்கோர் 178 பெற்றபோது 10(12) ஓட்டங்களுடன் ஹர்பஜனின் பந்தில் யுவராஜிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்,

அடுத்து கலிசுடன் இணைந்த பொலக் அதிரடியாக ஆடினார். மறுமுனையில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய கலிஸ் 91 ஓட்டங்களுடன் (146 பந்துகளில் 5 பவுண்டரி) சதத்தை தவறவிட்டு பதானின் பந்துவீச்சில் கைவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தா.

பொலக் அதிரடியாக துடுப்பெடுத்தாடி 17 பந்துகளில் 30 ஓட்டங்களை (4 பவுண்டரி, 1 சிக்சர்) ஆட்டமிழக்காமல் இருந்தார். இறுதியில் தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றது.

இந்தியா பந்துவீச்சில் பதான் 8 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்டங்களுக்கு 3விக்கெட்டுக்களையும், ஹர்பஜன் 10 ஓவர்கள் பந்துவீசி 32 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், சேவாக் 1விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

தொடர்ந்து 222 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியா துடுப்பெடுத்தாடியது. டெண்டுல்காரும், காம்பீரும் தொடக்க வீரர்களாக களமிறங்கினார்கள். காம்பீர் ஓட்டமெதனையும் பெறாமல் நிற்னியின் பந்தில் கேம்பிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்நது களமிறங்கிய சேவாக் அதிரடியாக துடுப்பெடுத்தாடினர். அவருடன் இணைந்து டெண்டுல்காரும் அடித்தாடினார். எனினும் அணியின் ஸ்கோர் 46 ஓட்டங்களைப் பெற்றபோது சேவாக் 20 பந்துகளில் 27 ஓட்டங்களைப் பெற்று பொலக்கின் பந்தில் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய அணித் தலைவர் டிராவிட் டெண்டுல்காருடன் இணைந்தார். எனினும் டெண்டுல்கார் 30 ஓட்டங்களுடன் அணியின் ஸ்கோர் 83 ஆக இருந்த போது நெல்லின் பந்துவீச்சில் பிறின்ஸிடம பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர் ந்து டிராவிட்டுடன் இணைந்து யுவராஜ் அணியை வெற்றிக்கு ஈட்டிச் சென்றார்.

எனினும் அணி ஸ்கோர் 162 ஓட்டங்களைப் பெற்ற போது யுவராஜ் 49 ஓட்டங்களைப் பெற்ற நெல்லின் பந்தில் பவுச்சரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் டோனி டிராவிட்டுடன் இணைந்தார். எனினும் அணி ஸ்கோர் 201 ஓட்டங்களைப் பெற்றபோது டோனி 12 ஒட்டங்களுடன் பலாங்கி வெல்டின் பந்தில் பவுச்சரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் கைவ டிராவிட்டுடன் இணைந்தார்.

இந்திய அணி 47.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 224 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. இப்போட்டியுடன் இந்தத் தொடரை தென்னாபிரிக்க, இந்திய அணிகள் 2-2 என்ற கணக்கில் சமன செய்தது.

இப்போட்டி நாயகனாக டிராவிட்டும், இத் தொடர் நாயகனாக யுவராஜ்சிங், கிறேம் ஸ்மித் ஆகியோர் தெரிவானார்கள்.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டி இந்திய தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான 50 ஆவது ஒருநாள் போட்டியாகும். இவற்றில் இந்தியா- 18, தென்னாபிரிக்கா- 30 வெற்றி பெற்றுள்ளன. 2 போட்டிகள் மழையால் கைவிடப்பட்டன.

(த-39)

# ஆஸி. ரசிகர்களிடமிருந்து விடைபெற்றார் லாரா

மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர் லாரா 2ஆவது இனிங்ஸில் அவுட் ஆனதும் தனது துடுப்பு மட்டையை சுழற்றிய படி மைதானம் முழுவதும் சுற்றிவந்து ரசிகர்களிடம் விடைபெற்றார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர் லாராவுக்கு இப்போது 36 வயதாகிறது. உலகில் அதிக டெஸ்ட் ரன்களை (11204) குவித்து முதலிடம் வகிப்பவர் இவரே. தற்போது லாரா அவுஸ்திரேலியாவில் அந்த நாட்டு அணியுடன் டெஸ்ட் போட்டியில் விளையாடினார். முதல் இனிங்ஸில் 226 ஓட்டங்கள் குவித்தார். 2வது இனிங்ஸில் 17 ஓட்டங்களுடன் அவுட் ஆனார்.

இனிமேல் மேற்கிந்தியத் தீவுகள் அணி 4 வருடங்கள் கழித்துத்தான் அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் வர முடியும். அப்போது லாராவுக்கு 40 வயது ஆகிவிடும். அன்றைக்கு அவர் அணியில் இருக்க வாய்ப்பில்லை. எனவே அவுஸ்திரேலிய மண்ணில் அவர் விளையாடும் கடைசி டெஸ்ட் இது என்பதைக் குறிப்பிடுகிற விதத்தில் நேற்று முன்தினம் 17 ஓட்டங்களுடன் அவுட் ஆனதும் தனது துடுப்பு மட்டையை சுழற்றியபடி மைதானம் முழுவதும் சுற்றி வந்து ரசிகர்களிடம் விடைபெற்றார். அவர்களும் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள்.

(த-39)



# சானியாவுடன் ஜோடி சேர்ந்து விளையாடுவது எப்போது?

## மகேஷ் பூபதி பேட்டி

இந்திய டென்னிஸ் நட்சத்திரம் சானியா மிர்சா உலக அரங்கில் புகழ்பெற்று விளங்குகின்றார். அவர் மகளிர் ஒற்றையர் பிரிவில வேகமாக முன்னேறி வந்து கொண்டிருக்கிறார்.

உலக தரவரிசையில் சானியா தற்போது 30ஆவது இடத்தை பிடித்துவிட்டார். இரட்டையர் பிரிவிலும் சானியா விளையாடுகிற போதிலும இதில் அவரால் அவ்வளவாக சோபிக்கமுடியவில்லை.

சானியா இப்போது வெளிநாட்டு ஜோடியுடன் இணைந்துதான் இரட்டையர் பிரிவு போட்டிகளில் ஆடிக் கொண்டிருக்கிறார். இந்திய வீரர்கள் மகேஷ்பூபதி, லியாண்டர்பயஸ் போன்றவர்களுடன் சானியா ஜோடி சோந்து விளையாட வேண்டும என்கிற எதிர்பார்ப்பு ரசிகர்களிடம் உள்ளது.

இதுபற்றி நேற்று டபுள்ஸ் ஸ்பெஷலிஸ்டான மகேஷ் பூபதியை பெங்களூரில் சந்தித் நிருபர்கள் அவரிடம் இது தொடர்பாக கேள்வி கேட்டார்கள். 'சானியாவுடன் நீங்கள் ஜோடி சேர்ந்து இணை இரட்டையர் பிரிவில் விளையாடுவீர்களா? அந்த வாய்ப்பு எப்போது வரும்?' என்று மகேஷ் பூபதியை பார்த்து நிருபர்கள் வினா எழுப்பினார்கள். அதற்கு பதிலளித்த மகேஷ் பூபதி, 'இது ஒரு சாதாரணமான விஷயம. இதற்கு முகக்கியத்துவம் கொடுத்து பிரஷரை ஏற்படுத்திக் கொள்ள நானோ, சானியாவோ விரும்பவில்லை. எது எப்போது



நடக்க வேண்டுமோ அது அப்போது நடக்கும்' என்று கூறினார்.

உலகத் தரவரிசையில் சானியா 100 வது இடத்தில் இருந்த போது, அவர் 50 வது இடத்துக்குள் வருவார் என்று மகேஷ் பூபதி சொன்னார். அது நடந்து விட்டது.

மேலும் மகேஷ் பூபதி கூறுகையில்,

அவுஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் போட்டியிலேயே நானும், சானியாவும் ஜோடி சேர்ந்து விளையாடி இருக்க வேண்டியது. அது நடக்கவில்லை. ஒருவேளை அது 2008இல் நடக்கலாம். நானும் சானியாவும் ஜோடி சேர்ந்து எப்போது விளையாடுவோம் என கால நிர்ணயம் செய்து சொல்ல முடியாது. நாங்கள் விளையாட ரெடியாகும் போது விளையாடுவோம்' என்று தெரிவித்தார்

(த-39)

## விளையாட்டுச் செய்திகள்

# மூன்றாவது டெஸ்ட் போட்டியிலும் ஆஸி. அணி 7விக்கெட்டுக்களால் வெற்றி

அவுஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அதனடிப்படையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி அதன் முதலாது இனிங்ஸில் 405 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக உலக சாதனை வீரர் பிறைன் லாரா 226 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக மெக்ராத் 3 விக்கெட்டுக்களையும், பிரட்லீ 3 விக்கெட்டுக்களையும், மைக்கில் 2 விக்கெட்டுக்களையும், சைமன்ஸ், வோன் ஆகியோர் தலா 1 விக்கெட்டுக்களையும் பெற்றனர்.

தொடர்ந்து தனது முதலாவது இனிங்ஸை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 428 ஓட்டங்களைப் பெற்றது. அவுஸ்திரேலிய அணி சார்பாக சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய கூசை ஆட்டமிழக்காமல் 133 ஓட்டங்களைப் பெற்றார். லாங்கர் 99 ஓட்டங்களையும், அணித்தலைவர் பொன்டிங் 56 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக பிரவோ சிறப்பாகக் பந்துவீசி 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். எட்வோஸ் 3 விக்கெட்டுக்களையும், ஆர். சிமித 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

முதலாவது இனிங்ஸில் 23 ஓட்டங்கள் பின்னின்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி தனது இரண்டாவது இனிங்ஸில் ஷேன் வோனின் துல்லியமான பந்துவீச்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் பிறவோ 64 ஓட்டங்களையும், சர்வான் 62 ஓட்டங்களையும் பெற்றனர். முதலாவது இனிங்ஸில்



இரட்டைச் சதம் அடித்த லாரா இரண்டாவது இனிங்ஸில் 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக ஷேன்வோன் 6 விக்கெட்டுக்களையும், பிரட்லீ 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

182ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி ஹைடனின் சிறப்பான துடுப்பாட்டத்தால் 3 விக்கெட்டுக்களை மாத்திரம இழந்து 182 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. அவுஸ்திரேலிய அணி சார்பாக சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய ஹைடன் ஆட்டமிழக்காமல் 87 ஓட்டங்களையும் கூசை ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ஹொலிமோர் 2 விக்கெட்டுக்களையும், பவல 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியிலும் வெற்றி பெற்றதன மூலம் அவுஸ்திரேலிய அணி 3 டெஸ்ட போட்டிகள் கொண்ட தொடரை 3-0 என்ற கணக்கில் வெற்றீ பெற்றது. ஆட்ட நாயகனாக மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர் பிறைன் லாராவும் இத் தொடரின் நாயகனாக அவுஸ்திரேலிய அணியின் மத்யூ ஹைடனும் தெரிவானார்கள்.

(த,39)

# முதலிடத்தில் டிராவிட்

இந்திய அணியின் தென்னாபிரிக்காவ்டனான 5ஆவது ஒருநாள் போட்டியில் வெற்றிக்குக் காரணமான அணியின் தலைவர் ராகுல் டிராவிட் 12 ஓட்டங்களைப் பெற்றபோது இந்த ஆண்டின் ஒருநாள் சர்வதேசப் போட்டியில் அதிக ஓட்டங்களைப் பெற்றவர் என்ற பெருமையைப் பெற்றார். 2005 ஆம் ஆண்டு அதிக ஓட்டங்களைப் பெற்ற வீரர்களின் விபரம் வருமாறு,

| வீரர்கள் | போடடி | ஓட்டங்கள் | 100 | 50 | அதிக பட்சம |
|---|---|---|---|---|---|
| டிராவிட் (இந்தியா) | 30 | 1092 | 2 | 9 | 104 |
| பொன்டிங் (அவுஸ்) | 26 | 1025 | 3 | 6 | 141 |
| சேவாக் (இந்தியா) | 33 | 1017 | 1 | 3 | 108 |

# சீனாவில் நிலக்கரிச் சுரங்கத்தில் விபத்து 64 தொழிலாளர் பலி; 79 பேரை காணவில்லை

(பீஜிங்)

சீனாவில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிலக்கரிச் சுரங்க விபத்தில் 64 சுரங்க தொழிலாளர்கள் பலியானதுடன் 79பேரைக் காணவில்லையெனவும் தெரியவருகிறது. காணாமல் போனோரின் நிலை என்ன என்பதும் தெரியவில்லை.



நிலக்கரி உற்பத்தியில் உலகில் முன்னணியில் உள்ள நாடு சீனா. சமீப காலமாக அங்கு நிலக்கரிச் சுரங்க விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன.

சீனாவில் வடகிழக்கிலுள்ள ஹெய் லாங்ஜியாங் மாகாணத்தின் ஹர்பின் நகரில் மாநில அரசின் நிலக்கரிச் சுரங்கத்தில் 221 சுரங்க தொழிலாளர்கள் நேற்று முன்தினம் தங்களது வழக்கமான பணியில் ஈடுபட்டுவந்தனர். காலை 9.40மணியளவில் திடீரென வெடிவிபத்து நடந்தது. இதையடுத்து மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். சுரங்கப் பகுதியிலிருந்து 74 பேரை உயிருடன் மீட்டனர். இந்த விபத்தில் 64 தொழிலாளர்கள் பலியாகியுள்ளனர்.

இதேவேளை, மீதமுள்ள 79 பேரைக் காணவில்லை. இவர்களும் இறந்திருக்கக்கூடும் என ஷியான்குவா பத்திரிகை தெரிவித்துள்ளது. இந்த சுரங்கப் பகுதியில் சப்ளை செய்யப்படும் தண்ணீரில் நச்சு மிகுந்த இரசாயனப் பொருட்கள் கலந்துவிட்டதால் கடந்த நான்கு நாட்களாக சுரங்கத்திற்கு தண்ணீர் சப்ளை முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது. சுரங்கத்தில் இருந்து காற்று வெளியேறும் வசதி இல்லாததால நிலக்கரி மாசுக்கள் சேர்ந்து வெடித்திருககலாம் என ஆராய்ச்சியாளர்கள் விசாரணைக்குப் பின் தெரிவித்துள்ளனர். (ற)

# சங்கரராமன் கொலை வழக்கு விசாரணை டிச. 12ற்கு ஒத்திவைப்பு

சங்கரராமன் கொலை வழக்கு விசாரணை புதுச்சேரி முதன்மை செசன்ஸ் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட ஜெயேந்திரர்,விஜயேந்திரர் உள்ளிட்ட அனைவரும் ஆஜராகினர். டிசம்பர் 12ஆம் திகதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள்



கோயில் மேலாளர் சங்கரராமன் கொலை வழக்கு தொடர்பாக காஞ்சி ஜெயேந்திரர், விஜயேந்திரர், காஞ்சி மடத்தின் மேலாளர் சுந்தரரேச அய்யர், விஜயேந்திரரின் தம்பி ரகு, அப்பு, கான்ட்ராக்டர் ரவி சுப்பிரமணியம் உட்பட மொத்தம் 25பேர் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் கான்டராக்டர் ரவி சுப்பிரமணியம் மட்டும் அப்ரூவராக மாறிவிட்டார்.

சங்கரராமன் கொலை வழக்கு தொடர்பாக காஞ்சிபுரம் மஜிஸ்திரேட் நீதிமன்றில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. பின்னர் இந்த வழக்கு விசாரணை செங்கல்பட்டு முதன்மை செசன்ஸ் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது.

இவ்வழக்கு விசாரணை,தமிழகத்தில் நடந்ததால் நியாயமாக நடக்காது என்றும் வழக்கை வேறு மாநிலத்துக்கு மாற்ற வேண்டும் என்றும் சுப்ரீம் கோர்ட்டில் ஜெயேந்திரர் மனுதாக்கல் செய்தார்.

இந்த மனு மீது கடந்த மாதம் 26ஆம் திகதி தீர்ப்பு வழங்கிய சுப்ரீம் கோர்ட், சங்கரராமன் கொலைவழக்கு விசாரணையை புதுச்சேரி முதன்மை செசன்ஸ் நீதிமன்றுக்கு மாற்ற உத்தரவிட்டது. இதற்கிடையில் செங்கல்பட்டு நீதிமன்றில் சங்கரராமன் கொலைவழக்கு கடந்த 9ஆம் திகதி விசாரணைக்கு வந்தது. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின் படி வழக்கு விசாரணை புதுச்சேரிக்கு மாற்றப்பட்டுள்ளதால் வழக்கில் சம்பந்தப்பட்ட அனைவரும் எதிர்வரும் 28ஆம் திகதி புதுச்சேரி கோர்ட்டில் ஆஜராக வேண்டும் என்று செங்கல்பட்டு செசன்ஸ் கோர்ட் நீதிபதி உத்தரவிட்டார்.

இதைத் தொடர்ந்து இந்த வழக்குத் தொடர்பான அனைத்து ஆவணங்களும் கடந்த 23ஆம் திகதி செங்கல்பட்டு கோர்ட்டில் இருந்து பலத்த பாதுகாப்புடன் எடுத்துவரப்பட்டு புதுச்சேரி நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டன. இவ்வழக்கு புதுச்சேரி முதன்மை செசன்ஸ் கோர்ட்டில் தலைமை நீதிபதி சின்னபாண்டி முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

புதுச்சேரி அரசு வக்கீல் சண்முகம், செங்கல்பட்டு செசன்ஸ் கோர்ட் வக்கீல் சண்முகம், தமிழக அரசு தரப்பு சிறப்பு வக்கீல் கந்தசாமி, சிறப்பு புலனாய்வுக குழுவின் கூடுதல் அரசு வக்கீல் உள்ளிட்டோா ஆஜராகினர். சங்கரராமன் கொலை வழக்கின் சிறப்புப் புலனாய்வு அதிகாரியும், எஸ்.பி.யுமான பிரேம்குமார், கூடுதல் அதிகாரிகளும் நீதிமன்றத்திற்கு வந்திருந்தனர்.

ஜெயேந்திரா தரப்பில் உயர் நீதிமன்ற வக்கீல் தினகரன், புதுச்சேரி வக்கீல் பக்தவச்சலம், விஜயேந்திரர் தரப்பில் வக்கீல்கள் லட்சுமணன், உதய பாஸ்கரன், சுந்தரேச அய்யரின் வக்கீல்கள் வரதராஜன், லாவண்யா, விஜயேந்திரரின் தம்பி ரகுவின் வக்கீல்கள் பார்த்தசாரதி, செந்தில் நாராயணன் உள்ளிட்டோரும் ஆஜராகினர். வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட ஜெயேந்திரர், விஜயேந்திரர் உளளிட்ட



24பேரும் புதுச்சேரி செசன்ஸ் கோர்ட்டில் தலைமை நீதிபதி முன்பு ஆஜராகினர்.

தலைமை நீதிபதி சின்னபாண்டி வழக்கை விசாரித்தார். அப்போது புதுச்சேரி அரசு வக்கீல சண்முகம், சங்கரராமன் கொலை வழக்கு விசாரணை சுப்ரீம் கோர்ட் உத்தரவுப்படி செங்கல்பட்டு செசன்ஸ் கோர்ட்டில் இருந்து புதுச்சேரி முதனமை செசன்ஸ கோர்ட்டுக்கு மாற்றப்பட்டுள்ளது என்று கூறினார்.

சங்கரராமன் கொலை வழக்கு குறித்த சிறப்பு புலனாய்வுக்குழுவின் கூடுதல அரசு வக்கீல் இந்த வழக்கில் அரசு தரப்பில் ஆஜராக எங்களை நியமித்து தமிழக அரச அரசாணை தந்துள்ளது. எனவே, இந்த வழக்கில் நாங்கள் ஆஜராகிறோம் என்றாா சிறப்பு அரசு வக்கீல் கந்தசாமியும் 'அரசாணை உள்ளது நானும் ஆஜராகிறேன்' என்றார்.

சுப்ரீம் கோர்ட் உத்தரவுப்படி வழக்கு விசாரணை புதுச்சேரிக்கு மாற்றப்பட்டுள்ளது. புதுச்சேரி நீதிமன்றில் வழக்கு வசாரணை நடப்பதால் புதுச்சேரி அரசு வக்கீல ஆஜராகலாம். தமிழக அரசு வக்கீல்கள் இங்கே ஆஜராக முடியாது என்று ஜெயேந்திரரின் வக்கீல் தினகரன் வாதிட்டார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட தலைமை நீதிபதி சின்னபாண்டி, இது குறித்து மனுத்தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டார். பின்னர் வழக்கு விசாரணையை எதிர்வரும் டிசம்பர் 12ஆம் திகதிக்கு மாற்ற உத்தரவிட்டார். (ற)


# வழக்கு விசாரணையில் சதாம் ஆவேசப் பேச்சு

(பக்தாத்)



ஈராக் முன்னாள் அதிபர் சதாம் உசேன் மீதான வழக்கு விசாரணை ஐந்துவாரங்களுக்குப் பின்னர் நேற்று முன்தினம் தொடங்கியது. நீதிமன்றில் ஆஜரான சதாம் நீதிபதியையும் அமெரிக்கப்படையினரையும கடும் வார்த்தைகளால் வசைமாரி பொழிந்தார்.

கடந்த 1982ஆம் ஆண்டில் ஷியா பிரிவு மக்கள் அதிகம் வாழும் பகுதியில் சதாம் உசேன காரில் பயணம் செய்தபோது அவரைக் கொலைசெய்ய முயற்சி நடந்தது. இதனால் கோபமடைந்த சதாம் ஆயிரக் கணககான ஷியா பிரிவு முஸ்லிம்களை படுகொலைசெய்ய உத்திரவிட்டார் என சதாம் மற்றும் அவரது சகாக்கள் ஏழு பேர் மீதும் வழக்கு விசாரணை நடந்து



வருகிறது. வழக்கின் முதல்கட்ட விசாரணை கடந்த அக்டோபர் மாதம் 19ஆம் திகதி நடந்தது.

ஐந்துவார இடைவெளிக்குப் பின்னர் நேற்று முன்தினம் பக்தாத் சிறப்பு நீதிமன்றில் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்குவந்தது. விசாரணைக்கு வந்த சதாம் கறுப்புநிற பேண்ட் மற்றும் வெள்ளை நிறசட்டை அணிந்திருந்தார். தனது கைகளுக்கு இடையே குரானை வைத்திருந்தார். முகத்தில் தாடியை முறையாக 'டிரிம்' செய்து புன்னகை தவழ பலத்த பாதுகாபபுக்கு இடையே நீதிமன்றிற்குள் சதாம் நுழைந்தார்.

விசாரணையைப் பார்க்கக் கூடியிருந்த மக்களைப் பார்த்து மக்களே அமைதியாக இருஙகள் என அராபி மொழியில் தெரிவித்தார். சதாம் பெயரைக் கூப்பிட்டு எட்டு நிமிடததிற்குப் பின்னர் கூண்டுக்குவந்த அவரிடமிருநது பேப்பர் மற்றும் பேனாவை பாதுகாவலர்கள் வாங்கிக்கொண்டனர்.

பேப்பர் பேனாகூட இல்லாமல் எப்படி ஒருவன் தன்னை விசாரணையில் குற்றமற்றவன் என காத்துக்கொள்ள முடியும் என்று கூறிய சதாம், நீதிமன்றத்திற்குள் அமெரிக்கப் பாதுகாப்புப் படையினருக்கு எதிராகக் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தினாா.

அமெரிக்கப் படையினரைப் பற்றி நான் உங்களுக்கு சொல்ல விரும்பவில்லை. அவாகளை இங்கிருந்து வெளியேற உத்தரவிடுங்கள். நீங்கள் ஒரு ஈராக்கியர், உங்களுக்கென்று இறையாண்மை உள்ளது. அவர்களெல்லாம் உங்கள் நாட்டில் உள்ளனர். அயல்நாட்டைச் சேர்ந்தவர்கள், நம்மீது படையெடுத்தவர்கள் என்று ஆவேசமாக சதாம் கூறினார். அத்துடன் நீதிபதியையும் காட்டமாகப் பேசினார். (ற)

# பறவைக் காய்ச்சல் பீதி

# இந்தியாவிலிருந்து கோழிகளை இறக்குமதி செய்ய ஜப்பான் திட்டம்

இந்தியாவிலிருந்து அடுத்த ஆண்டு முதல் கோழிக்குஞ்சுகளைப் பெருமளவில் இறக்குமதிசெய்ய ஜப்பான் திட்டமிட்டுள்ளது. ஜப்பானில் கறிக்கோழிக்கு பெருமளவில் வரவேற்புண்டு. அதனால் தங்களது தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வெளிநாடுகளிலிருந்து பெருமளவில் கோழிக் குஞ்சுகளை ஜப்பான் இறக்குமதி செய்து வருகிறது.

பெரும்பாலும் சீனா, தாய்லாந்து போன்ற நாடுகளிலிருந்து தான் கோழிக் குஞசுகளைப் பெருமளவு இறக்குமதி செய்வது வழக்கமாக இருந்துவந்தது. இந்நிலையில் சீனாவிலும், தாய்லாந்திலும் கோழிகளை பறவைக்காய்ச்சல் நோய் தாக்கி வருவதால் இந்த நாடுகளிடமிருந்து கோழிகளை இறக்குமதிசெய்ய ஜப்பானில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால், ஜப்பானிய இறக்குமதி நிறுவனங்கள் தற்போது இந்தியாவில் கோழிகளை இறக்குமதிசெய்யத் திட்டமிட்டுள்ளன. இந்திய நிறுவனங்கள் அளிககும் கோழிகளின் தரச்சான்றிதழ் சரியாக இருக்கும் பட்சத்தில் அடுத்தஆண்டு முதல் இந்த இறக்குமதி தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ற)



ரஜனிகாந்த் நடிக்கும் 'சிவாஜி' படத் தொடக்கவிழா ஏவி.எம்.ஸ்டுடியோவில் நேற்று முன்தினம் நடந்தது. சுஜாதா, வைரமுத்து, பாலாஜி சக்திவேல், ஸ்ரேயா, ஷங்கர், எம்.சரவணன், எம்.எஸ்.குகன், ராஜூ சுந்தரம் கலந்துகொண்டனர்.

தியாக உணர்வு தோன்றி விட்டால்,எத்தகைய சங்கடங்களையும் கருதாது நமது இலட்சித்தில் ஈடுபாடு கொண்டு செயலை திறம்பட செய்து முடிக்கும் பேராற்றல் ஏற்படும். -சுவாமி இராமதாசர்

வலம்புரி

## தூயமனத்துடன் பேச்சை ஆரம்பித்தால் வெற்றியுண்டு

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் ஆற்றிய மாவீரர் தின உரையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வரவேற்றுள்ளார்.

புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள மகிந்த ராஜபக்ஷ சமாதான முயற்சியை முன்னெடுப்பதற்கு சந்தர்ப்பம் கொடுப்பதாக தனது உரையில் பிரபாகரன் கூறியிருந்தார்.

இவ்வாறு வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தை வரவேற்றுள்ள ஜனாதிபதி சமாதானப் பேச்சுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

சமாதானப் பேச்சுக்கு வருமாறு பகிரங்கமாக அழைப்பு விடும் தந்திரக்கள் எதுவும் பயனற்றவை. நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் உண்மையான விருப்பமும் ஆர்வமும் இருந்தால் நோர்வேயின் அனுசரணையை பயன்படுத்துவதே ஒரேவழியாகும்.

இதனை விடுத்து பகிரங்க அழைப்பு விடுவதன் மூலமாக மீண்டும் ஓர்தடவை சர்வதேசசமூகத்தை ஏமாற்றி இலாபம் பெற நினைக்கும் எந்த முயற்சியும் பாரதூரமான யுத்தத்தையே ஏற்படுத்தும்.

கடந்த கால சமாதானப் பேச்சுக்கள் தோற்றுப் போனதற்கான அடிப்படைக்காரணம் உள்ளும், புறமும் வேறுபட்ட நினைப்புக்கள் இருந்தமையாகும்.

இலங்கை என்ற இந்த அழகிய நாட்டில் எல்லா இன மக்களும் எல்லா உரிமைகளும் பெற்று வாழவேண்டும்.

இவ்வுரிய இலக்கை அடைவதற்காக சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற நினைப்பிருந்தால் 'சமாதானம்' என்றோ கிடைத்திருக்கும்.

ஆனால் ,காலத்திற்கு காலம் நாட்டை ஆட்சி செய்தவர்கள் காடைத்தனத்தோடு செயற்பட்டார்கள்.

இலங்கை பௌத்த சிங்கள நாடு, இங்கு சிறுபான்மை மக்கள் இரண்டாம் தரப்பிரஜைகள் என்ற ஆழ்மனப்பதிவுகளுடனேயே அவர்களின் காய் நகர்த்தல்கள் இருந்தன.

இதனாலேயே இன்று வரை இனப்பிரச்சினை நீண்டு நிலைக்கின்றது. கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை தற்காலிக அமைதி நிலையை தந்துள்ளது.

இத் தற்காலிக அமைதிச் சூழ்நிலை நிரந்தரமாகவேண்டும். அதற்கான அவகாசம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் புதிய ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

புலிகளின் தலைவர் பிரபாகரனின் உரையை வரவேற்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எடுக்கின்ற சமாதான முனைப்புகளே இந்த நாட்டில் சண்டைக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக அமையும்.

அவ்விதம் யுத்தம் நிரந்தரமாக இல்லா தொழிய வேண்டுமாயின் மகிந்தவின் சமாதான முயற்சிக்குள் தூய்மையான சமாதானநினைப்பிருப்பது அவசியமாகும்.

# யாழ். தொ. நு. கல்லூரி மாணவர்கள் இன்று முதல் பகிஷ்கரிப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுககு ஆதரவாக யாழ். தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்களும் இன்று முதல் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில ஈடுபடவுள்ளனர். இது தொடர்பில் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றினையும் வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையில்,

எமது தமிழ் சகோதர தொழில்நுட்பக் கல்லூரிகளுள் ஒன்றான மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரியில் கடந்த 23ஆம் திகதி இவ்வாண்டுக்கான தமிழீழ மாவீரர் தினத்தை நினைவுகூர்ந்து அஞ்சலி செய்யும் வண்ணம் அத் தொழில்நுட்பக் கல்லூரியின் மாணவர்கள்,விரிவுரையாளர்கள், ஊழியர்கள் உட்பட அனைத்துக் கல்லூரி சமூகத்தினராலும் பலவித ஒழுங்குகள் செய்யப்பட்டு கலலூரி வளாகத்தில் மிக உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பதற்கு ஏதுவாக மாவீரர் நினைவிடம் ஒன்று ஒதுக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டது.

இதனைத் தடுத்து எமது மாவீரர்களின் தியாகங்களை கொச்சைப்படுத்தி எம் சகோதார மாணவர்களின் தமிழ்த் தேசிய எழுச்சியை மழுங்கடித்து வரலாற்று ரீதியில் எதிாகாலத்தில் சுயநிர்ணய உரிமையைப் பறித்து தமிழ் மக்களின் தமிழீழ தாயகக் கனவைக் கலைந்து அரசியலில் சுய இலாபம் தேட முற்படும் சில சீ'⌐ தமிழ் பேசும் அரசியல் கட்சிகளினதும் அரசினதும் திட்டமிட்ட சதியாக எம் சகோதர தொழிலநுட்பக் கல்லூரியினரால் அமைக்கப்பட்ட மாவீரர் நினைவிடம் சேதமாக்கப்பட்டதோடு அங்கு அலங்கரிக்கப்பட்டிருந்த சிவப்பு,மஞ்சள கொடிகளும் அபகரிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. அத்துடன் இம மாவீரர் தின நிகழ்வை ஒன்றிணைந்து நடாத்துவதற்கு தமது ஆதரவையும் உணர்வினையும் வெளிப்படுத்தும் கல்லூரி சமூகத்திற்கு தொலைபேசியூடாக கொலை அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டது.

இது மட்டுமல்லாமல் அங்கு தமிழ் மக்களின் உணர்வு பூர்வமான எழுச்சி மிக்க நிகழ்வுகள் எவையும் நடத்தப் படக்கூடாது எனவும் எச்சரிக்கப்பட்டது.

இதன் காரணமாக கல்லூரி சமூகத்தின் கல்விச் செயற்பாடு மக்களினது இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

இவவாறு 'தமிழ்ப் பிரதேசங்களில் அரங்கேறும் காட்டுமிராண்டித்தனத்தை முற்றாகத் தடுத்து சூத்திரதாரிகளை இனங்கண்டு களைந்து இனிவரும் காலங்களில் மாணவர்களை சீண்டக்கூடிய வகையிலான கல்விச் சமூகத்தின் மீதான கீழ்த்தரமான செயற்பாடுகளை நடைபெறாமல் தடுத்து மாணவர்கள் பூரண சுதந்திரத்துடன் தமது சுய உரிமைகளைப் பெறுவதற்கும் அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து கல்வி சமூகத்தின் கல்விச் செயற்பாடுகளுக்கு எந்த ஒரு அச்சுறுத்தலோ இடையூறுகளோ இல்லாமல் அவர்களின் பூரணமான கல்வி நடவடிக்கைகள் நடைபெற சம்பந்தப்பட்ட தரப்பினர் உறுதிமொழி வழங்குவதோடு மாணவர்களின் தனிப்பட்ட பாதுகாப்பை எழுத்துமூலமாக உறுதிசெய்யும் வரை' மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரி சமூகத்தினருக்கு ஆதரவாக யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் உட்பட அனைத்து யாழ். தொழில்நுட்பக் கல்லூரி சமூகத்தவர்களும் ஒன்றிணைந்து ஒற்றுமையை வெளிக்காட்டும் முகமாகவும் அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் முகமாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதும், நடைபெறவுள்ளதுமான பரீட்சைகளை இடைநிறுத்துவதோடு தொழில்நுட்பக் கல்லூரியின் அனைத்துக் கல்விச் செயற்பாடுகளையும் நிறுத்தி பகிஷ்கரிப்பு போராட்டத்தில் குதித்து எமது எதிர்ப்பை வெளிக்காட்டி எம் சகோதர உறவுகளோடு உணர்வுகளைப் பகிர்ந்து போராட்டத்தை இன்று முதல் சரியான முடிவு கிடைக்கும் வரை தொடருவோம்.

'ஒன்றுபட்டு உழைத்து தமிழ் சமூகத்தின் ஒற்றுமை உணர்வை விரோதிகளுக்கும், துரோகிகளுக்கும் எடுத்துக் காட்டுவோம்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## தற்காலிக சந்தை நடவடிக்கையால் சுகாதாரச் சீர்கேடு; மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

சந்தைகள் இயங்காத நாட்களில் நல்லூர் செங்குந்தா சந்தை மரக்கறி, மீன் வியாபாரிகள் விற்பனைப் பொருட்களை கலைமகள் வீதி ஓரத்தில் வைத்து விற்பனைசெய்வது வழக்கம். குடிசன நெருக்கம் நிறைந்த அவ் வீதியின் இரு பக்கங்களிலும் இவ் வியாபாரிகள் விற்பனைப் பொருட்களைக் குவித்து வைத்து விற்பனை செய்வதால் பாதசாரிகளும் மோட்டார் சைக்கிள்,சைக்கிள் போன்ற வூாகனங்களில் வருபவர்களும பயணம் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. மாத்திரமன்றி விற்பனை முடிந்ததும் வியாபாரிகள மரக்கறிக் கழிவுகளையும் மீன் எச்சங்களையும் அவ்விடத்திலேயே விட்டுச் செல்வதால் துர்நாற்றம் வீசி சுகாதாரச் சீர்கேடுகளை ஏற்படுதது வதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கிறார்கள்.

செங்குந்தா சந்தை யாழ். மாநகரசபையின் கீழும், கலைமகள் வீதி நலலூர் பிரதேச சபையின் கீழும் வருவதால் சம்பந்தப்பட்டவர்கள் இதில கவனம் செலுத்த வேண்டுமென்றும் அப்பகுதி மக்கள் தரபபில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (து)

## சுருக்கிட்ட நிலையில் சடலம் மீட்பு

(துன்னாலை)

யாாக்கரு தில்லையமபலப் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள வயல் வெளியில் அரச மரமொன்றில் சுருக்கிட்ட நிலையில் சடலம் ஒன்று நெல்லியடிப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி நபர் இரண்டு நாட்களுக்கு முன்பே இறந்திருப்பதாகவும் கரணவாயப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியரான ஆ.இராமநாதன் என்பவரது சடலமே அது எனவும் பின்னர் அடையாளங் காணப்படடது. சடலம் பிரேதப் பரிசோதனையின் பொருட்டு மந்திகை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. (ரு-101)

## பரீட்சை மதிப்பீட்டு முறைகளில் மாற்றம்

(கொழும்பு)

2005 ஆம் ஆண்டிற்கான ஜீ.சீ.ஈ. உயர்தர, சாதாரண தரப் பரீட்சையின் மதிப்பீட்டு நடைமுறைகள் நவீனமயப்படுத்தப்படவுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இநத நடைமுறையில் 100 சதவீதம் திருத்தத்தைப் பேணுவதே தனது நோக்கம் என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இதன்மூலம் அநாவசியமான தாமதங்களும் தவிர்க்கப்படுமென அவர் குறிப்பிட்டார். இந்தத் திட்டத்தின் கீழ் பரீட்சை மதிப்பீட்டாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். அத்துடன் பரீட்சை மேற்பார்வையாளர்கள், மதிப்பீட்டாளர்கள் ஆகியோருக்கு பயிற்சிகளும் நடாத்தப்படும்.

மேலும்,இவற்றுக்கான கொடுப்பனவுகளும் அதிகரிக்கப் படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (த-7)

## திருட்டு முயற்சியை முறியடித்த நாய்கள்

சமீபத்தில் நல்லூர் வடக்கு விநாயகர் வீதியிலுள்ள வீடொன்றில் வசிப்பவர்கள் தூங்கிக்கொண்டிருந்த நேரததில் நாய்கள் பலமாகக் குரைத்த சத்தத்தைக் கேட்டு வெளியே வந்து நாலாபக்கங்களிலும் ரோச் லைற்றை அடித்துப் பார்த்தபோது அவ் வீட்டிலிருந்த கொட்டிலில் கறுப்புநிற மழைக்கோட் அணிந்த நான்கு பேர்கள் பதுங்கியிருபபதைக் கண்டு கூச்சலிடவே அத் திருடர்கள் மதில் மேல் தாவி ஓடிவிட்டதாகத் தெரிகிறது.

நாய்கள் குரைத்த சத்தத்தைக் கேட்டு தாங்கள் எழுந்து பார்க்காவிட்டால் அத் திருடர்கள் வட்டினுள் புகுந்து திருடியிருப்பார்கள் என அவ் வீட்டுக்காரர்கள் கூறுவதுடன், தாங்கள் வளர்த்த நாய்களினால் திருட்டொன்று தவிர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கிறார்கள். (து)

## ஐரோப்பிய யூனியன்— 900 மில்லியன் நிதிஒதுக்கீடு

(தென்மராட்சி)

வடகிழக்கு மாகாணத்தில் சுனாமியினாலும் யுத்தத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுப் பணிகளுக்கு உதவுவதற்கென ஐரோப்பிய யூனியன் நிவாரண புனர்வாழ்வு அமைச்சுக்கு 900 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இநத நிதி ஒதுக்கீட்டின் மூலம் வடக்கு- கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் சுய சார்புத்தன்மைக்கு உதவிகள் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன்,மீன்பிடி,விவசாயத்துறைகளில் ஈடுபட்ட மககளின் மேம்பாடுக்கும் உதவிகள் அளிக்கப்படவுள்ளன.

இதேசமயம் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள கற்கோவளம் மற்றும் புனிதநகராகிய இரு கிராமஙகளிலும் மிக நீண்டகாலமாக, அரச காணிகளில் குடியிருந்து வந்த 50 குடும்பங்களுக்கு யாழ்ப்பாண மாவட்ட அரச செயலகம் காணிகளை வழங்கியுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (ரு-16)

## பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழப் புவியியல்துறை மண்டபத்தில் இன்று மாலை 3மணிக்கு நடைபெறவிருந்த படைப்பாளியும் விமர்சகருமான சுந்தரராமசாமியின் நினைவஞ்சலிக் கூட்டம் தவிர்க்க முடியாத காணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. (த)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



நான் குறையுடையவன். நான் ஆண். நான் பெண். நான் பாவி. நான் மனம். எனக்கு சிந்தனை உண்டு. நான் சிந்திக்கிறேன் என்பவையெல்லாம் வெறும் மனமயக்கங்கள். நீ சிந்திப்பதே இல்லை. உனக்கு உடல் ஒருபோதும் இருந்ததே இல்லை. நீ குறை உடையவனாக இருந்ததே இல்லை.

சுவாமி விவேகானந்தர்

# பிரபாவின் உரையை ஏற்கத்தவறினால் யுத்தத்திற்கு ஜனாதிபதியே பொறுப்பு

## தமிழர் தேசிய இயக்கத்தலைவர் நெடுமாறன்

(கொழும்பு)

தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் ஆற்றிய மாவீரர் நாள் உரையை உணர்ந்து கொள்வதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தவறினால் யுத்தத்திற்கு அவரே பொறுப்பு என்று தமிழகத்தின் தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ.நெடுமாறன் எச்சரித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ பெரும்பான்மை இல்லாமல் வெற்றி பெற்றுள்ளார். மிகக்குறைந்த வாக்குகள் வேறுபாட்டின் காரணமாக ரணில்விக்கிரமசிங்க தோல்வியடைந்தார்.

தமிழர்கள் தமக்கு இனிமேல் தீர்வு கிடைக்காது என்று கருதி ஒட்டு மொத்தமாக தேர்தலைப் புறக்கணித்து விட்டனர். தேர்தல் நாள் அன்று தமிழர் தாயகம் பகுதிகளில் வீதிகள் வெறிச்சோடிக்கிடந்தன.

வாக்குச் சாவடிகளுக்கு எவரும் வரவில்லை வாக்களிக்கவும் இல்லை. நடைபெற்று முடிந்த தேர்தலின் மூலம் இரு உண்மைகள் வெளிப்பட்டுள்ளன.

சிங்களவர்கள் இரு கூறாகப் பிளவு பட்டுள்ளனர். தமிழர்கள் ஒன்று பட்டு பெரும் சக்தியாக இருக்கிறார்கள். ஒட்டு மொத்தமாக தேர்தலைப் புறக்கணித்ததன் மூலம் தமிழர்கள் தங்களின் நிலைப்பாட்டினை உலகநாட்டிற்கு உணர்த்தியுள்ளனர்.

நாங்கள் வேறு ,சிங்களவர்கள் வேறு இரு இனங்களும் தனித்தனியானவை. சிங்களவர்கள் தங்கள் தலைவரை தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்படும் தேர்தலில் தமிழர்கள் பங்கெடுக்க முடியாது.மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் தங்கள் கருத்தினை வெளியிட்டுள்ளார்கள்.

இவ் உண்மைப் பொருளை புரிந்து கொள்ள சிலரே ஏதேது கூறி தாங்களும் குழம்பி மற்றவர்களையும் குழப்ப முயற்சிக்கிறார்கள் இனப்பிரச்சினையின் அடிப்படையில் உணர்ந்து பேச்சுவார்த்தையினை தொடங்குவதற்கான பொறுப்பு ஜனாதிபதி மகிந்தவிடம் உள்ளது.

இதை உணர மகிந்த தவறுவராயின் யுத்தத்திற்கான பொறுப்பு அவரின் தலைமீது சுமத்தப்படுமென நெடுமாறன் தெரிவித்தார். (ச-4)

## சந்திரிகா-கிளிண்டன் நேற்றுச் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் சுனாமி ஆழிப்பேரலை அனர்த்த புனரமைப்புப் பணிகளுக்கான ஐக்கியநாடுகள் சபையின் சிறப்புத் தூதுவரும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியுமான பில்கிளிண்டன் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் நேற்றுச் சந்தித்து கலந்துரையாடினார்.

சுமார் 2 மணி நேரத்திற்கு மேலாக நடைபெற்ற சந்திப்பில் சமாதான விடயங்கள் உட்பட உள்நாட்டு மற்றும் அனைத்துலக விடயங்கள் பற்றி இருவரும் கலந்துரையாடினர். (ச-4)

# நெடுந்தீவில் காணாமல் போன சிப்பாயை மீட்பதற்கு கண்காணிப்புக்குழுவின் உதவி

(கொழும்பு)

நெடுந்தீவில் அண்மையில் கடத்தப்பட்ட கடற்படை வீரர் இதுவரை மீட்கப்படவில்லை என்றும் அவர்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்க வில்லை என்றும் கடற்படையின் ஊடகப்பேச்சாளர் கப்டன் ஜெயந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட கடற்படை வீரர் கடந்த 20 ஆம் திகதி கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது இனந்தெரியாதவர்களினால் கடத்தப்பட்டதாகவும் அவரை தேடிக்கண்டு பிடிக்கும் முயற்சிகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதோடு 70 பேரிடம் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கடத்தப்பட்ட கடற்படை வீரர் வேறு பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என்றும் அவர் கூறினார். அவரை மீட்பது குறித்து இலங்கை போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழு ஊடாக தொடர்ந்து முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.(ச-8)

## வல்வெட்டித்துறை நகரசபை

# சுகாதாரப் பகுதி ஊழியர்களின் போராட்டம் ஐந்தாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை நகர சபை சுகாதாரப் பகுதி ஊழியர்களின் வேலை நிறுத்துப்போராட்டம் நேற்று 5வது நாளாக தொடர்ந்தது.

நகர சபை வாயிலை மூடி அதன் முன்னால் அமர்ந்திருந்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.


இதன் காரணமாக நகரசபையின் செயற்பாடுகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்துளீளன. 'தொழிலாளர்களை ஊதாசீனப் படுத்தும் செயலாளரை மாற்றுக'' சுத்திகரிப்புத்தொழிலாளர்களுக்கான சுனாமி கடன் நிவாரணங்கள் சலுகைக் கடன்கள் அனைத்தையும் வழங்க வேண்டும்'' ''சுகாதாரத் தொழிலில் ஈடுபடுவோருக்கான பொருட்களை உடனடியாக வழங்க வேண்டும்' போன்ற கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை வல்வெட்டித்துறை நகர சபை ஊழியர்களுக்கு ஆதரவாக யாழ்.மாநகரசபை மற்றும் நகரச்சபைகளில் பணிபுரியும் சுகாதாரப் பகுதி ஊழியர்கள் அனைவரும் இன்று முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தலைவர் ஆ.ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க, வல்வெட்டித்துறை நகர சபை சுகாதாரப் பகுதி ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால் கடந்த ஐந்து நாட்களாக சுனாமி மீள் குடியேற்ற தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்ட இடங்களுக்கான நீர்வழங்கல் மற்றும் இதர சுகாதார சுத்திகரிப்பு நடவடிக்கைகள் முழுமையாக பாதிப்படைந்துள்ளன.

இதனால் ஐந்து இடங்களில் அமைக்கப்பட்ட தற்காலிக குடியிருப்புக்களில் இருக்கும் சுமார் 1500 மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன.

அத்துடன் பாடசாலைகளுக்கான நீர் வழங்கல் மற்றும் சுகாதார கழிவகற்றல்கள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன. இது குறித்து உரிய தரப்பினர் உடனடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-32)



நேற்று திருகோணமலை கிண்ணியாவிற்குச் சென்ற அமெரிக்கா முன்னாள் ஜனாதிபதி பில்கிளிண்டன் சுனாமியால் பாதிக்கப்பட்ட அப்பகுதி முஸ்லிம் மக்களுடன் கலந்துரையாடுவதை படத்தில் காணலாம்.

# புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் பில்கிளிண்டனிடம் மனு கையளிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் சுனாமி நிவாரண பணிகளுக்கான விசேடதூதுவரும்,அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியுமான பில் கிளிண்டனுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் ரி.பி. றெஜி நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

நேற்று பிற்பகல் கிளிண்டனுடன் றெஜி கலந்துரையாடி ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் இன்றைய நிலைமை குறித்து விவாதித்தார்.

வடக்கு -கிழக்கில் ஆழிப்பேரலை மீளமைப்பு மூன்றாம் கட்ட நடவடிக்கைகளில் உள்ள மந்த நிலை குறித்து றெஜி விபரித்துள்ளார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் நெருக்கடி நிலை குறித்து றெஜி கிளிண்டனிடம் மனு ஒன்றையும் கையளித்தார்.

மட்டக்களப்பில் தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தின் அலுவலகம் ஐந்து தடவைகள் குண்டுத்தாக்கு தலுக்குஉட்பட்டமை குறித்து கிளிண்டனிடம் தெரிவிக்கப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கும் உதவிகள் பற்றியும் றெஜி விபரித்தார். (ச-4)

ராஜேஸ்வரி சினிமா
யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஷாம்,சினேகா,அபர்ணா
நடித்த
ஏ பி சி டி
கா.நே:10.30,2.30,6.30,9.30(பு.நே)

# பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் 4 ஆம் திகதி அதிபர் தலைமையில் நடை பெறவுள்ளது.

இவ்விழாவில் நிக்கொட் நிறுவன பிரதித்திட்டப் பணிப்பாளர் கே.நவரத்தினராசா பிரதம விருந்தினராகவும் சிறுவர் பாதுகாப்பு நிதிய இணைப்பாளர் ஏ.பேரின்பநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-72)

## சமாதான முயற்சிகளை...

மங்கள சமரவீரவிடம் ஒப்படைத்துள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதித் தேர்தலில் பிரசாரக்காலத்தில் மகிந்தவின் பிரசார நடவடிக்கைகளுக்கான ஒருங்கிணைப்பாளராக தீவிரமாக செயற்பட்டமையால் மங்கள சமரவீரவே வெளிநாட்டு அமைச்சராக ஜனாதிபதி மகிந்த நியமித்துள்ளார்.

இந்நிலையில் சமாதான முயற்சிகளை கையாளும் பொறுப்பையும் மங்கள சமரவீரவிடம் ஒப்படைத்துள்ளமை குறித்து கட்சியின் சில அங்கத்தவர்கள் விசனம் அடைந்துள்ளதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ச-4)

## வங்காள...

கப்பட்டுள்ளது.

இதேவேளை வடமராட்சி கடற்பரப்பில் நேற்று பாரிய அலைகள் ஏற்பட்டதுடன் கடல் கொந்தளிப்பாகவும் காணப்பட்டது. (ச-8)

நூல் வெளியீடு
ஸ்ரீ தர்மசாஸ்த்தா கல்ப்ப பூஜாக்கிரமம் எம்மிடம் இலவசமாக பெற்றுக்கொள்ளவும்.
தாணு-வாசுதேவகுரு
கோண்டாவில் மேற்கு
T.P:021 4591643
(9987)

## சுனாமி மீள்...

வேண்டியுள்ளது.

இதற்காக நடவடிக்கைகளை செயற்படுத்தும் நாட்கள் தொலைவில் இல்லையென ஜனாதிபதி மகிந்த கூறினார். இதேவேளை சுனாமி மீள் கட்டுமான பணிகள் குறித்து ஆராய்ந்து வரும் கிளிண்டனுக்கு ஜனாதி பதி மகிந்த நன்றி கூறினார். (ச-4)

## வரவு செலவுத்திட்டம்-2006

நகரசபை கட்டளைச் சட்டத்தின் 1979 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்கச்சட்டத்தால் திருத்தப்பட்ட 255ஆம் அத்தியாயமான 178 (3) ஆம் பிரிவின் பிரகாரம் 2006 -ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்டம் 01.12.2005 -ம் திகதி தொடக்கம் ஏழு (07) நாட்களுக்கு அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நகரசபை அலுவலகம்
*சாவகச்சேரி*
*30.11.2005*

திருமதி கு.ஆறுமுகம்
*செயலாளர்,*
*நகரசபை சாவகச்சேரி*

(C-1842)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
தனுஷ், பிரியாமணி மற்றும் பலர் நடித்த
பாலுமகேந்திராவின்
அது ஒரு கனாக்காலம்
இசை: இளையராஜா
கா.நே: 11.00, 2.45, 6.00 (பு.நே)

மனோகரா யாழ்.
யாழ். நகரில் முதன்முறையாக DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்

இளைய தளபதி விஜய் வெடிக்கும் சிவகாசி
ஸ்ரீகல் + அசின்
கா.நேரம் 10.30, 2.30 6.30, 9.30(பு.நே)
சில தினங்கள் மட்டும் காலை 8.30 காட்சி காண்பிக்கப்படும்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.11.2005 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.